Registered as a Newspaper in Srilanka
விலை ரூபா: 10.00
# வலம்புரி
Valampurii
பக்கங்கள்: பன்னிரண்டு
ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து
சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 09 சனிக்கிழமை (22.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 124

# புலிகளை பேச்சுக்கு இணங்கவைக்க நோர்வே அரசாங்கம் தீவிர நடவடிக்கை

## ஹென்றிக்சன், பௌயர் மீண்டும் கிளிநொச்சிக்கு விரைவு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளை பேச்சில் பங்கேற்கவைப்பதற்கு நோர்வே அரசு தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக பேசுவதற்கு இலங்கை போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சிக்கு விரைந்தார்.

இன்று கண்காணிப்புக்குழுத் தலைவருடன் இணைந்து நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

நேற்று ஜனாதிபதியுடனான சந்திப்பினை மேற்கொண்ட பௌயர் இன்று தமிழ்ச்செல்வனை சந்தித்து பேசுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா புலிகளின் பகுதிக்குள் இராணுவம் ஊடுருவித் தாக்குதல்

வவுனியாவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியில் இராணுவ ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் மு.கந்தசாமி என்பவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா புதூர் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இத் தாக்குதலை இராணுவத்தினரும் ஆழ ஊடுருவும் அணியினரும் இணைந்து நடத்தியுள்ளதாக விடுதலைப்புலிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தால் காரணமாக நேற்று யாழ்.நகரம் வெறிச்சோடியது

(யாழ்ப்பாணம்)

புதுவருட தினத்தன்று யாழ்.நகரப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞனின் கொலையைக் கண்டித்து யாழ்.நகரில் ஹர்த்தால் இடம்பெற்றது.

இதற்கான அழைப்பினை யாழ்.முஹம்மதியா முஸ்லிம் ஜும்மா பள்ளிவாசல் விடுத்திருந்ததற்கு அமைய யாழ்.குடாநாட்டு வர்த்தகர்கள் கடைகளை அடைத்து இப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

மதியத் தொழுகையின் பின்னர் இக் கொலையைக் கண்டித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவில் பகுதியில் தேடுதலின்போது 12 கிளைமோர்க் குண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மட்டுவிலில் கிளைமோர்குண்டுகள் மற்றும் வெடிபொருட்கள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளதாக இராணுவ ஊடகப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கிளைமோர் குண்டுகளும் வெடிபொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மட்டுவில் பகுதியில் கைவிடப்பட்டிருந்த வீடொன்றின் முற்றத்தில் இந்த வெடிபொருட்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் இந்த வெடிபொருட்களில் 12 கிளைமோர்க் குண்டுகள் உள்ளடங்குவதாகவும் இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பல்வேறு வகையிலான கைக்குண்டுகள் டெட்டனேட்டர்கள் ,மிதிவெடிகள் மற்றும் ஆர் .பீ .ஜி குண்டுகள் ,ரி56 ரகத் துப்பாக்கி 5 ,ரி 56 ரகதுப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் ரவைகள் ஆயிரத்து 400, இராணுவ உடைகள் 10, 75கிலோகிராம் உடைய வெடிபொருட்களும் இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கையை கைச்சாத்திட்ட பின்பு ஒரே இடத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட பாரிய வெடி பொருட்கள் இதுவென இராணுவத்தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வடக்குக் கிழக்கில் இடம்பெறும் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி தலைமையில் குழு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரச்சினையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்பட நான்கு அமைச்சர்கள் உள்ளடங்கியுள்ளதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சினால் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் விசேடகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்குப் பிரச்சினையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் இது குறித்து தேவையான (12 ஆம் பக்கம் பார்க்க)

## தோண்டப்பட்ட குழிகள் நேற்று மூடப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரால் வீதிகளில் தோண்டப்பட்ட குழிகள் யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவின் கோரிக்கையினால் மீள நிரப்பப்பட்டுள்ளது.

இராணுவக் காவலரண்கள் அமைந்துள்ள இடங்களில் உள்ள வீதிகளில் பாரிய குழிகள் ஏற்படுத்தப்பட்டு வீதித்தடைகள் போடப்பட்டன.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதனையடுத்து இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா மற்றும் மேலதிக நீதிவான் ஆகியோருக்குமிடையில் கடந்த 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது.

மேற்படி சந்திப்பின்போதே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து நேற்று பல இடங்களிலும் குழிகள் அனைத்தும் மீள நிரப்பப்பட்டன. இதேவேளை வீதிகளில் தோண்டப்பட்ட குழிகளினால் பல வாகனங்கள் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–4,5)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# செல்லத்துரை சுவாமிகளுக்கு அஞ்சலி

ஈழத்தின் ஞானச்சுடரான சிவயோக சுவாமிகளின் அருங்கொடையாய் உருப்பெற்ற சிவதொண்டன் நிலையத்தின் கண் எனப் போற்றப்பட்ட சைவப் பெருமகனானர் அ.செல்லத்துரை சுவாமிகள் சிவன் கழல் இணைந்தமையை அறிந்து அன்னாருக்கு எமது பேரஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவதொண்டன் நிலையம் 1935ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. அத்துடன் இது இன்று பல கிளைகளை உருவாக்கி சமயப் பணியுடன், பொது நலப் பணிகளையும் ஆற்றி வருகின்றது. யோக சுவாமிகள் சமாதிக் கோவிலை நிர்வகித்து வருவதுடன், யோக சுவாமிகள் மகளிர் இல்லம், சிவதொண்டன் நிலையம் செங்கலடி என இதன் கிளை ஸ்தாபனங்களும் இவ்வளவு சிறப் பாக வளர்ந்து வருவதற்கு செல்லத்துரை சுவாமிகளின் குரு பக்தியும் அர்ப்பணிப் புடனான சேவையும் மூலகாரணமாகும்.

குருபக்தி, அறப்பணி மூலமே ஆண்டவனை அடைய முடியும் என்கின்ற குறிக்கோளுடன் எத்தகைய பேதமின்றி சுவாமிகள் தம் வாழ்நாளில் செய்த பணிகளை நாம் சொல்லில் கூறிட முடியாது.

என சிவ தொண்டன் நிலையத் தலைவர் செல்லத்துரை சுவாமிகளின் மறைவு குறித்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அனுப்பிய அஞ்சலிச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். (து)

# இராணுவ சோதனைக் கெடுபிடி

(யாழ்ப்பாம்)

யாழ்ப்பாணக்குடாநாட்டில் படையினரின் கெடுபிடிகள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டு செல்வதனால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளது.

குடாநாட்டில் உள்ள முக்கியமான சந்திகளில் போக்குவரத்தில் ஈடுபடுகின்றவர்கள் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

போக்குவரத்தில் ஈடுபடுகின்றவர்கள் நீண்ட நேரமாக தடுத்து வைத்து சோதனை செய்வதனால் அலுவலகங்களுக்கு செல்கின்றவர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் கால தாமதமாகவே செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

குறிப்பாக யாழ்.நகருக்கு வரும் ஒருவர் பல்வேறு இடங்களில் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார். படையினரின் சோதனையின் போது அடையாள அட்டை இல்லாதவர்கள் பெரும் அசௌகரியங்களைஎதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக பரமேஸ்வரசந்தி நாவலர்வீதி,ஆஸ்பத்திரி, கே. கே. வீதி, பலாலி வீதி முதலிய இடங்களிலேயே படையினரின் சோதனைக் கெடுபிடிகள் மிகவும் மோசமாக இருக்கின்றது. (து-15)

# அவுஸ்திரேலிய எஸ்.பி.எஸ்.தொலைக்காட்சியில் மட்டக்களப்பில் இயங்கும் கருணா பயிற்சி முகாம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணாகுழுவின் பயிற்சி முகாம் இயங்குவதை அவுஸ்திரேலியாவின் எஸ்.பி.எஸ்.



தொலைக்காட்சி சேவை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த புதன் கிழமை இரவு 8.30 மணிக்கு ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியில் இலங்கையின் பாதுகாப்பு விவகார ஆலோசகரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டபாய ராஜபக்ஷ இது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என மறுக்கும் செய்தியும் இடம்பெற்றிருந்தது.

எஸ்.பி.எஸ்.தொலைக்காட்சி செய்தியாளர் அரோன் லெவிஸ் கிழக்கிலங்கையின் அரச கட்டுப்பாட்டுப்பகுதியிலமைந்துள்ளகருணா குழுவின் முகாமினுள் சென்று எடுத்த வீடியோ படங்கள் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டன. அதில் கருணா குழுவினர் 30பேர் ஆர்.பி.ஜி.ஏவுகணை செலுத்திகளுடனும் ஏ.கே.47ரக துப்பாக்கிகளுடனும் காணப்படுகின்றனர்.

செய்தியாளர் கருணாகுழு பற்றி கோட்டபாய ராஜபக்ஷவிடம் கேட்ட போது அவரளித்த பதில் இப்படியான குழுவொன்று இருக்கிறது என்று கூறக்கூடிய பொறுப்புள்ள அமைப்பொன்று இருக்குமாயின் கருணாகுழு எங்கே இருக்கிறது? எந்த பகுதியில்? எப்படி இயங்குகிறது? உமக்கு யார் தெரிவித்தார்? என்பன போன்ற விபரங்களை எமக்கு தரலாம் நாம் அதுபற்றி கவனிப்போம். நாமும் முயற்சிகளெடுத்து இதுபோன்ற குழுக்களின் செயற்பாடுகளை தடுத்திருக்கிறோம் என்பதாகும் என்று



தொலைக்காட்சி தெரிவித்தது.

ஆயுதக்குழுக்கள் அரச கட்டுப்பாட்டு பகுதியில் இயங்கவில்லை என்று திட்டவட்டமாக பாதுகாப்பு ஆலோசகர் பதிலளித்ததாகவும் தொலைக்காட்சி தெரிவித்து இதன் போது செய்தியாளர் தான் மட்டக்களப்பில் கருணாகுழுவினரை நேரில் சந்தித்தது பற்றி தெரிவித்தபோது கேட்டபாய ராஜபக்ஷ சிரித்துவிட்டு எல்.ரீ.ரீ. ஈ. காரர்கள் உங்களை தமது முகாமொன்றிற்கு அழைத்துச்சென்று இதுதான் கருணா முகாம் என்று கூறியிருக்கலாம் என்றார் எனவும் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் அரோன் லெவிஸ் மேலும் கூறுகையில், தான் அக்குழுவினருடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்த பின்னரே தன்னை உள்ளே அனுமதித்தாகவும், கருணா குழுவின் பொறுப் பாளர் பிரதீப் என்பவருடன் பேசிய தாகவும் தெரிவித்தார். தனது குழு அரசியல், இராணுவ நிதி மற்றும் புலனாய்வு விவகாரங்களை கவனித்து வருவதாகவும் தாம் வாகரைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தாக்கு தல்களை நடத்தியதாகவும் பிரதீப் கூறினார் எனத் தெரிவித்த செய்தியாளர் காட்சியை நிறைவு செய்யும் போது 'நான் அங்கு சென்றபோது அரசு எவ் வளவுதான் மறுத்தாலும் கருணாவின் இராணுவப் பிரிவு இயங்குவது அப்பட்டமாக தெரிந்தது' என்றார். (து-6)

# இராசி பலன்

2[illegible].04.2006

(சித்திரை 9, சனிக்கிழமை)

நவமி பிற்பகல் 3.07 மணிவரை

திருவோணம் முற்பகல் 10.13 மணிவரை

இராகுகாலம் 09.01-10.31மணிவரை

சுபநேரம் 3.01-4.31 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரபுத்தனம், இஷ்டசித்தி, ஆரோக்கியம், நன்கொடை. |
| இடபம் | பித்தரோகம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, பிரயாணம். |
| மிதுனம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய இடையூறு, மாரியாதைக்குறைவு, ஆரோக்கியக்குறைவு. |
| கடகம் | விருந்துபசாரம், குடும்பசுகம், தொழில் நன்மை, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | மனமகிழ்ச்சி, உடல்நலம், உற்சாகம், பகைவர் நேசம். |
| கன்னி | சிறுவியாதி, மனச்சோர்வு, முயற்சி கைகூடும், பணக்குறைவு. |
| துலாம் | தாய்வழி உறவு, மனசஞ்சலம், புதிய விரயம், உஷ்ண நிலை. |
| விருச்சிகம் | எடுத்த காரியம்கைகூடும், பிரயாண நன்மை, சகோதாரர் உதவி, போசனசுகம். |
| தனுசு | எடுத்த காரியம் தாமதமாகும், விவாதம், குடும்பக்கவலை, பணவிரயம். |
| மகரம் | தேகநலன், சயனசுகம், எடுத்த காரியம் கைகூடும், கற்பனை மிகுதி. |
| கும்பம் | பிரயாண அலைச்சல், சயனசுகக்குறைவு, சுபசெலவு, மரியாதைக்குறைவு. |
| மீனம் | இஷ்டசித்தி, தனலாபம், உறவினர், சந்திப்பு, உடல்நலம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# மாணவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

பாடசாலைகளில் மாணவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தும் நிகழ்வுகள் அதிகரித்து வருவதாக சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள் ளது. இது தொடர்பாக நாட்டின் பல பிரதேசங்களிலிருந்தும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தனியார் பகுதிநேர வகுப்புக்களிலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனை தடுப்பதற்காக பாடசாலை மட்டத்தில் விசேட செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை வளவிற்குள் பிரவேசிக்கும் வெளியாட்கள் தொடர் பாக கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக பாடசாலை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (சு-9)

# டெங்கு விழிப்புணர்வு வாரம்

எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை டெங்கு விழிப்புணர்வு வாரமாக பிரகடனப்படுத்துமாறு யாழ்.மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் சகல சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேசசபைகள், நகரசபைகள், பிரதேச செயலகங்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்களிற்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் நுளம்பினால் பரவும் நோய்களில் டெங்கு காய்ச்சல் கூடிய அளவில் பரவி வருகின்றது. தற்போது இடைக்கிடையே பெய்துவரும் மழைகாரணமாக டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள், பெருகி இந்நோயை ஏற்படுத்துகின்றன.

எனவே இக்காய்ச்சலை வருமுன் தடுப்பதற்கு ஏற்றவாறு வீட்டுச் சூழல் மற்றும் வெற்றுக்காணி களையும் துப்பரவாக வைத்திருப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் பாடசாலைகளில் மற்றும் பொது இடங்களை சிரமதானங்கள் மூலம் துப்பரவு செய்தல், மற்றும் நுளம்பு பெருக் கம் அடையும் சிறிய நீர் கொள்கலன்கள், நீர் தேங்கும் பாத்திரங்கள், பினாஸ்டிக் கோப்பைகள் போன்றவற்றை அப்புறப் படுத்தி சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி இந் நோயின் பரவுகையை குறைக்கமுடியும் எனவும் கிராம அமைப்புகளின் உதவியுடன் இதனை அமுல் படுத்துவதுமாறும் கோரியுள்ளார். (து-252)

# விளம்பரப்பலகை மாயம்

நல்லூர் நாயன்மார்கட்டு வீதியில் உள்ள குளத்துக்கு அருகாமையில் உள்ள காணியில் புதிதாக திறக்கப்பட்ட கல்வியங்காடு சமூர்த்தி வங்கியின் விளம்பரப்பலகை மாயமாக மறைந்துள்ளது. (சு-134)

# பிரதேச செயலக ரீதியில் கைத்தொழிலாளர் சங்கம்

கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் மேம்பாட்டு அமைச்சினால் பிரதேச செயலக ரீதியாக.பிரதேச செயலாளர்களின் தலைமையின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச்சபை உத்தியோகத்தரின் உதவியுடன் 'சிறிய நடுத்தர கைத் தொழிலாளர் சங்கம் (S.M.I.Union)' ஒன்றை அமைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இச் சங்கத்தை ஸ்தாபிக்கும் முகமாக எதிர்வரும் 26ஆம் திகதி மு.ப.11.30மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறிய நடுத்தர கைத்தொழில்களை மேற்கொள்வதற்கான கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.பிரதேச செயலக பிரிவிலுள்ள சிறியநடுத்தர கைத்தொழில்களை மேற்கொள்வோர் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு பயன் பெறுமாறு யாழ்.பிரதேசசெயலர்கேட்டுள்ளார்.(து)

# இலஞ்ச ஊழல் குற்றச் செயல்கள் தொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்டும் விசேட திட்டம்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் குற்றச்செயல்கள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விசேட திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களைக் குறைக்கும் நோக்கில் நாடாளாவிய ரீதியில் இத் திட்டம் அமூல் செய்யப் படுமென்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் குற்றச்செயல்கள் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக விசாரணைகள் விரிவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள விரும்பினால் 011-2586851,011-2586841என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும். (த-9)

# அநுராதபுரத்தில் கிளைமோர் வெடிப்பு

அநுராதபுரம் பதவிய அபி மான புர பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இரண்டு கிளைமோர் குண்டுகள் வெடித்துள்ளன. இராணுவத்தினர் வழமையான வீதிச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது பதவிய கெபிட்டிக்கொல் லவா வீதியில் அபிமானபுர 13 ஆவது மைல் கல்லிற்கு அருகில் சந்தேகத்திற்கிடமான பொருள் ஒன்றை அவதானித்துள் ளனர்.

இதனையடுத்து அனைவரையும் தரையில் படுக்குமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து அனைவரும் தரையில் படுத்தனர். சிறிது நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு கிளைமோர் குண்டுகளும் வெடித்தன. எனினும் இதில் படைத்தரப்பினருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அப்பிரதேசத்தில் தேடுதல் நட வடிக்கைகளை மேற்கொள்ளப்பட்ட போதிலும் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. (ச)

# எமது சிறுவர்களின் உளவியலை பாதிக்கும் இராணுவக் குவிப்பு

## இது ஒரு மருத்துவரின் பார்வை

தற்போது உள்ள சூழல் பயங்கரத்தின் உறைவிடமாக உள்ளது. இத்தகைய சூழல் ஆர்ஜன்டீனா, குவாட்டமாலா, கொலம்பியா போன்ற நாடுகளில் காணப்பட்டதற்கு ஒப்பானது. சமூகத்தில் ஒட்டுமொத்தமான பயத்தினை ஏற்படுத்தி கொடூரக் கட்டுப்பாட்டினை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இலங்கையின் புதிய பாதுகாப்புக் கொள்கை வகுப்பாளரால் இத்தகைய கொப்சன் உலகம் (Hobbesion World) உருவாக்கப்பட்டுள்ளது. இதனை மனித நேய அமைப்புக்கள் உணரவேண்டும். இங்கு யாராவது ஒருவர் எந்நேரமும் இலக்குவைக்கப்பட்டுக் கொல்லப்படலாம்.



இதனையே கடந்த சில தினங்களாக புத்தூரிலும், திருகோணமலையிலும் நடைபெற்ற கொலைகள் எடுத்துக் காட்டுகின்றன. இன்று வீதியின் சில யார் தூரத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தமிழர் மீதுள்ள வெறுப்பு தார் றோட்டினை வெட்டிய ஆழத்திலிருந்தே தெரிகிறது.

கனடா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தமையும் அண்டை நாடான இந்தியா நம்மை உதாசீனப்படுத்தி வருவதும் அண்மையில் அதிகரித்த வன்முறைகளுக்கு ஊக்கியாக உள்ளது. இதனால் அடையாளமற்ற நிலையிலும் அனுதாபமற்ற நிலையிலும் எமது உதிரம் உயிருடன் உறைகின்றது.

தெருவில் தனது தந்தையுடன் செல்லும் நான்கு வயதுச் சிறுவனை இராணுவச் சிப்பாய்கள் தடுத்து வைத்தபோது குழந்தை தந்தையிடம் வினாவுகின்றது.

*அப்பா, பச்சை உடுப்போடு இருப்பது யார்?*

தந்தை:- ஆமிக்காரன்.

குழந்தை:- *அவன் கதைப்பது விளங்கவில்லையே?*

தந்தை:- சிங்களவர்

குழந்தை:- *அவர் கையில் வைத்து இருப்பது என்ன?*

தந்தை:- ரைபிள்.

குழந்தை:- *அதனால் என்ன செய்வான்?*

தந்தை:- சுடுவான்.

குழந்தை:- *வீட்டு வளவில் மயிர்க்கொட்டி சுடுவது போலா?*

தந்தை:- இல்லை.

குழந்தை:- *அப்ப ஏன் சுடவேணும்?*

தந்தை:- கொல்ல.

குழந்தை:- *ஏன் இவங்கள் கொல்ல நிற்கிறாங்கள்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்?*

மேற்கூறப்பட்ட சம்பாசணை போன்று பல கேள்விகளை எமது குழந்தைகள் கேட்கின்றன. இது குழந்தைகளை உளவியல் ரீதியில் நனவிலி மனதில் போர்க்களத்திற்கு இட்டுச்செல்லும் அன்றாட நிகழ்வாகும்.

ஆனால் சிறு பிள்ளைகளுக்கு யுத்தக் களத்தின் காட்சியினை அவர்களின் வீட்டு வாசலிலேயே படையினர் அமைத்து வருகின்றனர். அவர்களின் நனவிலி மனதில் துப்பாக்கி பற்றியும் அதனைப் பயன்படுத்தி, உயிர்களை கொல்வதுபற்றியுமான பதிவுகளை ஏற்படுத்தும்.

தினமும் கொல்வதற்காக தெருக்களில் ஆயுதங்களுடன் நிற்பதும், அச்சுறுத்துவதும், வெறுப்பு உணர்வை உருவாக்குவதுடன் மலரும் மொட்டுக்களில் ஒருவித அச்சத்தையும் ஏற்படுத்தி விடும்.

உண்மையில் சிறுவர்களை மனதளவில் யுத்தக்களத்திற்கு அல்லது சண்டைக்கு இட்டுச் செல்வது தெருக்களில் நிற்கும் படையினரே.

இது அவர்களின் எதிர்கால ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

எனவே சிறுவர் நலன்பற்றிக் கதைப்பவர்கள், இதயபூர்வமாக செயற்படுவார்களாயின், இன்று வடக்கு கிழக்கில் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தினை பொது இடங்களில் இருந்து விலக்க வேண்டும்.

இவ்வாறாக சிறு பிள்ளைகளை யுத்தத்திற்கு இணைத்தல் என்பது ஆக்கிரமிப்பு இராணுவத்தால் தினமும் செய்யப்பட்டு வருகின்றது.

சிறுபிள்ளைகளை யுத்தத்திற்கு இணைப்பதை தடுத்தல் என்ற கோட்பாடு மனித நேய அமைப்புக்களால் முன்வைக்கப்படுகின்றது.

தற்போது உள்ள சிக்கலான நிலையில் தமிழ் அரசியல்வாதிகள், வடக்கு கிழக்கில் சிறுவர்களைப் பாதிக்கும் பயங்கர கலாசாரம் பற்றிய கருத்து நிலையை சர்வதேச மட்டத்தில் தெரியப்படுத்த வேண்டும். அன்றேல் ஆர்ஜன்டீனா, குவாட்டமாலா, கொலம்பியா போன்ற நாடுகளின் நிலைமை இங்கும் ஏற்படலாம்.

**டாக்டர் நித்திலன்**

---

## கௌரிபாலனுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு புத்தூரில் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். மாநகர சபை ஊழியராகிய கந்தசாமி கௌரிபாலனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று முன்தினம் நண்பகல் 1 மணியுடன் யாழ். மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் தமது பணிகளை நிறுத்தி அஞ்சலி நிகழ்வில் ஈடுபட்டனர். (க)

## திரைப்படக்காட்சி

யாழ்.பல்கலைத் திரைப்பட வட்டத்தினரது ஏற்பாட்டில் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் அனுசரணையுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மேற்படி நிலையத்தில் ஆர்.செல்வராஜின் இயக்கத்தில் உருவான 'உப்பு' எனும் தமிழ்த் திரைப்படம் அகன்ற திரையில் காண்பிக்கப்படும்.

துப்புரவுத் தொழிலாளரின் யதார்த்த வாழ்வைச் சித்தரிக்கும் இப்படம் பல விருதுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றதாகும்.

படக்காட்சியின் இறுதியில் காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (க)

## கௌரவிப்பு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளை, யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவரும் செஞ்சிலுவைச் சங்க பிரிவுக்கிளைகளில் கடந்த காலங்களில் அர்ப்பணிப்புடன் சங்க வளர்ச்சிக்காக சேவையாற்றிய மூத்த தொண்டர்களை கௌரவிக்கவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டு மூத்த தொண்டர்கள் முதற்கட்டமாக கௌரவிக்கப்படவுள்ளனர். (க-134)

## தேங்காய் விலை உயர்வு

ஊர்காவற்றுறைப் பகுதியில் தேங்காய் ஒன்று 15 ரூபாயில் இருந்து 20 ரூபாய் வரை விற்கப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க, அனலைதீவில் தேங்காய் ஒன்று ஆறு ரூபாயாக விற்கப்படுகின்றது. (க-72)

## சுயதொழில் முதல் வழங்கும் வைபவம்

குடும்ப புனர்வாழ்வு நிலைய யுத்த அனர்த்தங்களினால் குடும்பத் தலைவர்களையிழந்து இன்னல்களையனுபவித்து வரும் 50 விதவைகளுக்கான சுயதொழில் முதல்வழங்கும் வைபவத்தை இன்று நடைமுறைப்படுத்துகின்றது.

ஜெனீவா குளோபல் நிறுவனத்தின் நிதி உதவியின் மூலம் குடும்பப் புனர்வாழ்வு நிறுவனம் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றது. இச்சுயதொழில் முதலைப் பெற்றுக் கொள்ளும் விதவைகள் கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, விவசாயம் ஆகிய சுயதொழில்களில் ஈடுபடவுள்ளனர்.

குடும்ப புனர்வாழ்வு நிலைய யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ள இச்சுயதொழில் முதல் வழங்கும் வைபவத்திற்கு குடும்ப புனர்வாழ்வு நிலைய வடபிராந்திய இணைப்பாளர் எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன் தலைமை தாங்குவார். யாழ். அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்ட யாழ்.இணைப்பாளர் லோறாபில், ஐ.ஓ.எம். நிறுவனத் திட்ட இணைப்பாளர் திருமதி என்.தர்சினி, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட யாழ்.இணைப்பாளர் கே.கே.றஞ்சன், யுனிசெவ் நிறுவன இணைப்பாளர் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் இத்திட்டத்திற்கான பயனாளிகள் தொண்டமானாறு, கல்வயல், நாவாந்துறை, பாஷையூர், காவற்கட்டு, மாதகல் ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் சுயதொழில் முதலாக தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா 15000 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

குடும்பப் புனர்வாழ்வு நிலையம் யுத்த அனர்த்தங்களினால் குடும்பத் தலைவர்களையிழந்த அடுத்த தொகுதி விதவைகளுக்கு சுயதொழில் முதலை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே குடும்ப புனர்வாழ்வு நிலையம் 25 விதவைகளுக்கு சுயதொழில் முதல் வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (து-52)

## முத்திரைக் கட்டணம் அறவிட நடவடிக்கை

ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கடன் அட்டைகள் மற்றும் சத்திய அத்தாட்சிப் பத்திரம், காப்புறுதி, உறுதி எழுதுதல் பேரன்ற சட்ட நடவடிக்கைகள் உட்பட பல பொருட் சேவைகளுக்கு முத்திரைக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பின் 44ஆம் இலக்க 2ஆவது ஷரத்துடன் 2006ஆம் ஆண்டு 12ஆவது இலக்க முத்திரைக் கட்டண விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த முத்திரைக்கட்டண அறவீடு தொடர்பாக வர்த்தமானி அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கடன் அட்டையின் மூலம் செலவிடப்படும் ஒவ்வொரு ஆயிரம் ரூபாவிற்கும் அல்லது அதன் ஒரு பங்கிற்கும் 10ரூபா முத்திரைக் கட்டணம் அறவிடப்படவுள்ளது.

சத்திய அத்தாட்சிப்பத்திரம் எழுதும்போது 100 ரூபா முத்திரைக்கட்டணம் அறவிடப்படுவதுடன் காப்புறுதி உறுதிப்பத்திரமொன்றை எழுதும்போது ஒவ்வொரு ஆயிரம் ரூபாவிற்கும் அல்லது அதன் ஒரு பங்கிற்கும் 50சதம் முத்திரைக் கட்டணமாக அறிவிடப்படவுள்ளது.

இதேவேளை, பிரசித்த நொத்தாரிசாக கடமையாற்றத் தேவையான அனுமதிப் பத்திரத்தைப் பெற ஆயிரம் ரூபாவும் வர்த்தகம் மற்றும் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்திற்கு ஆயிரம் ரூபாவும் கட்டணமாக அறவிடப்படும். வாடகைக்கு விடப்படும் சொத்துக்களுக்கும் இந்த முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-9)

## அதிஷ்டச் சீட்டிழுப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய் முன்பள்ளி வளர்ச்சி நிதிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட அதிஷ்டச் சீட்டிழுப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. தலைவர் எஸ்.பாலபத்மன் தலைமையில் நடைபெற்ற அதிஷ்ட சீட்டிழுப்பில் முதல் பரிசிற்குரிய சீட்டை கலாபூஷணம் சு.துரைசிங்கமும் அவரைத் தொடர்ந்து ஐயனார் தேவஸ்தான பூசகர் எம்.வாமதேவன், கிராம சேவகர் சிவலிங்கம்மற்றும் பொதுமக்களும் பரிசிற்குரிய சீட்டுக்களை எடுத்தனர்.

அதிஷ்ட இலக்கங்கள்: 1.2387, 2.1233, 3.326,

ஆறுதல் பரிசுகளுக்குரியன: 158, 393, 234, 1045, 2367, 1273, 2348. (து)

## புனித சூசையப்பர் திருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நடுத்தெரு புனித-சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் மே முதலாம் திகதி திங்கட் கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து திருச் சொரூபப் பவனி, ஆசீர்வாதம் ஆகியன நடைபெறும்.

தற்பொழுது ஆயத்த வழிபாடுகள் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஜேமிஸ் அடிகள் தலைமையில் நடைபெற்று வருகின்றன. (க-72)

## முன்பள்ளிகளின் கண்காட்சி

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவிலுள்ள வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளிகளின் கண்காட்சி இன்றும், நாளையும் காலை 9.00 மணி தொடக்கம் 5 மணிவரை வல்வெட்டி சிதம்பராக் கல்லூரியில் வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளிகளின் தலைவர் ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (து-35)

# இன்று ஒரு தகவல்

## மந்திரமா? தந்திரமா?

எனக்கு வேண்டப்பட்ட ஒருவர் சீரியஸாக என்னிடம் ஒரு யோசனை கேட்டார். "ஏன் சார்...சுலபமாக சம்பாதிப்பதற்கு என்ன என்று நானும் பலநாள் யோசித்துப் பார்த்துவிட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றார். "என்ன முடிவு அது?" என்று விசாரித்தேன். "எனக்கு தெய்வீக அருள் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொள்ள வேண்டியது. மக்கள் தேடி வருவார்கள். அவர்களிடம் ஏதாவது வாங்கிக் கொண்டு அருள் வாக்குச் சொல்ல வேண்டியது. எப்படி இந்த திட்டம்?" என்றார். "இந்தக் காலத்தில் மக்கள் அவ்வளவு சுலபமாக உங்களை நம்பிவிடுவார்களா?" என்றேன்.

"ஏன் மாட்டார்கள்... அதற்கும் கைவசம் சில மந்திரங்கள் எல்லாம் கற்று வைதிருக்கிறேன். அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்துகாட்டினால் சுலபமாக கூட்டம் சேர்ந்துவிடும்" என்றார். "அது என்ன மந்திரம்?" என்று விசாரித்தேன். "மந்திரம் எல்லாம் ஒன்றுமில்லை.எல்லாம் தந்திரம்தான்" என்று சொல்லி என்னிடம் சில விபரங்களைச் சொன்னார். "அதையெல்லாம் இப்போது உங்கள் காதிலும் போட்டு வைக்கிறேன். ஏனென்றால் எனக்கு வேண்டப்பட்ட அந்த நபர் மாதிரி சிலர் உங்கள் ஊருக்கும் வரலாம். அப்படி வந்தால் நீங்கள் ஏமாறாமல் இருக்க வேண்டுமல்லவா? அதற்காகத் தான்.

சிலபேர் என்ன செய்வார்கள் தெரியுமா? உங்கள் ஊருக்கு வருவார்கள். ஏதாவது ஒரு இடத்தில் உட்கார்ந்து மந்திரிப்பார்கள். பூமிக்குள்ளிருந்து கடவுள் வரப் போகிறார்... அவரை வரவழைக்கும் மந்திரம் தான் இப்போது நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்பார்கள்.

மக்கள் எல்லோரும் சுற்றிநின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள்... நிஜமாகவே அந்த இடத்தில் பூமி லேசாக வெடிக்க ஆரம்பிக்கும். உள்ளேயிருந்து ஒரு சிலை வெளியே வரஆரம்பிக்கும். உடனே இவர் காலில் விழுந்து எல்லோரும் கும்பிடுவார்கள்.

இதை எப்படிச் சொல்கிறார்கள் தெரியுமா? சுண்டல் கடலை இருக்கிறதல்லவா? அதை ஊறவைக்க வேண்டும்.

முதல்நாள் இரவே யாருக்கும் தெரியாமல் அந்த இடத்தில் குழியைத் தோண்டி ஊறவைத்த சுண்டல் கடலையைத் தேவையான அளவுக்குக் கொட்டி அதில் சிறியதாக ஒரு சாமி சிலையை வைத்து மண்ணைப் போட்டு மூடி வைத்துவிடவேண்டும். மறுநாள் காலையில் மக்களை அழைத்துப்போய் அந்த இடத் தில் உட்காந்து மந்திரம் செய்யவேண்டும். ஊற வைத்த கடலை முளைக்க ஆரம்பிப்பதனால் அந்த இடம் லேசாக வெடிக்க ஆரம்பிக்கும். சாமிசிலை வெளியே வரும். இதுதான் அதில் உள்ள தந்திரம்.

வெறும் கையில் விபூதி வரவழைப்பது எப்படி தெரியுமா? வடிக்கும் கஞ்சியில் விபூதியைக் கலந்து சிறுசிறு உருண்டையாக உருட்டிக் காயவைக்க வேண்டும். அதில் ஒரு உருண்டையை எடுத்து விரலிடுக்கில் சுலபமாக மறைத்து வைக்கலாம். பக்தர்கள் கையை நீட்டும் போது இந்த உருண்டையை விரல் நுனிக்குக் கொண்டுவந்து உதிர்த்துவிடலாம். உருண்டை சிறிதாகத் தெரிந்தாலும் விபூதி நிறையவரும். சில படங்களில் சட்டத்தில் லக்டிக் அமிலத்தை ஸ்பிரே பண்ணி வைத்துவிட்டால் காற்றில் உள்ள ஈரத்தால் சாம்பல் உண்டாகும். அப்படி உருவாகும் சாம்பல் விபூதியைக் கொட்டும்.

சிலபேர் நெருப்பு இல்லாமலே தீயை உண்டாக்குவார்கள். அது எப்படியென்றால்... பொட்டாஷியம் பர்மாங்கனேற் துகள்களைப் போட்டுவிட்டு அதன் மேல் கிளிசரினை ஊற்றினால் போதும் நெருப்பு இல்லாமல் அது எரியும். சிலபேர் சமாதிநிலையில் இருப்பதாகவும் அந்த சமயத்தில் நாடித்துடிப்புக் கூட இருக்காது என்றும் சொல்வார்கள். டாக்டர்களும் சோதித்துப் பார்த்துவிட்டு அது சரிதான் என்று சொல்வார்கள். இது எப்படியென்றால் பற்றரிபோன்ற கடினமான பொருளை கக்கத்தில் வைத்து அழுத்திக் கொண்டால் போதும் மணிக்கட்டில் நாடித்துடிப்பு தெரியாது!

இப்படி நிறைய தந்திரங்கள்... அதெல்லாம் மந்திரம் என்ற பெயரில் செல்லுபடி ஆகிக் கொண்டிருக்கிறது. அசல் எது,போலி எது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அறிவு பூர்வமான ஆன்மிக உணர்வு தான் மக்களை மேம்படுத்தும்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# குற்றவாளிகளுக்கு ஆடம்பர வசதிகள்; விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

நாட்டின் மிக மோசமான குற்றவாளிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் ஆடம்பர குளுகுளு வசதிகள் கொண்ட தனி வீடொன்றில் மேற்பார்வையாளர்களின்றி அனுமதிக்கப்பட்டிருப்பது பற்றிய தகவல்கள் வெளியாகியதைத் தொடர்ந்து அவற்றை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார். ஓய்வுபெற்ற இரண்டு உச்சநீதிமன்ற நீதியரசர்களைக் கொண்ட ஆணைக்குழு தனது அறிக்கையை மூன்று மாதங்களில் சமர்ப்பிக்கும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில குற்றவாளிகளுக்கு சிறப்பான சலுகைகள் வழங்கப்படுவது, சிறைக் கைதிக்களை வைத்தியசாலைகளில் அனுமதிப்பது தொடர்பான நடைமுறைகள், போதைப்பொருள், ஆயுதங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் என்பன சிறைச்சாலைகளுக்குள் கொண்டுவரப்படுவது, சிறைக் கைதிகள் சிறைகளுக்கு வெளியேயுள்ள பொது நிறுவனங்களுக்கு தொழில் நிமித்தம் செல்லுதல், கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குதல் போன்ற விடயங்கள் பற்றி ஆணைக்குழு ஆராய்ந்து தனது சிபார்சுகளை செய்யும்.

சிறைக் கைதிகள் சிலருக்கு சிறப்பான சலுகைகள் வழங்கப்படுவது குறித்து கவனத்தில் கொண்டுள்ள ஜனாதிபதி இவற்றில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று நீதியமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கி யுள்ளார். (த-6)

# தொடரூந்து கட்டணங்கள் 10சதவீதத்தால் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

தொடரூந்து கட்டணங்களை 10சதவீதத்தால் அதிகரிக்க உத்தேசித்துள்ளதாக தொடரூந்து சேவையின் பொதுமுகாமையாளர் தேவசிறி தெரிவித்துள்ளார்.

டீசல் விலை அதிகரித்துள்ளதால் தொடரூந்து திணைக்களத்தின் மேலதிக செலவீனங்களைக் கட்டுப்படுத்த இந்தக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அரச மற்றும் தனியார் பேரூந்துக் கட்டணங்கள் 16 வீதத்தால் உயர்த்தப்படுமென்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவர் எல்.எ.விமலரட்ண தெரிவித்துள்ளார்.

இதன்படி குறைந்தளவு கட்டணம் 4ரூபாவிலிருந்து 5ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதுடன் கட்டணத்தில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது.

போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம். பௌசிக்கும் தனியார் சிற்றூர்திச் சங்கத்தினருக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இந்தக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான பேரூந்துகளில் பாடசாலை மாணவர்கள் இலவசமாக பயணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள்ள விலைகளின் அடிப்படையில் தனி யார் சிற்றூர்திக் கட்டணங்களை 26 வீதத்தால் அதிகரிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எனினும் 16 வீதத்தினால் மாத்திரம் கட்டணங்களை அதிகரிக்கவும், மீதியுள்ள வீதத்தை நிவாரணங்களாக வழங்குவதற்கு அரசாங்கத்துடன் இணக்கம் காணப்பட்டதால் தமது போராட்ட கோரிக்கையை விலக்கிக் கொண்டதாக தனியார் பேரூந்து உரிமையாளர்களின் சங்கத் தலைவர் கேமுனு விஜயரத்தின தெரிவித்துள்ளார். (த-9)

# வடக்கு-கிழக்கிற்கான பயணத்தை தவிருங்கள்!

**அமெரிக்க அரசு அந்நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவிப்பு**

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம் என அமெரிக்கா தனது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், அரச படைகள் மீதான கிளைமோர் தாக்குதல் அதிகரித்தது.இந்தத் தாக்குதலில் பொதுமக்களின் வாகனங்களும்சேதமடைந்துள்ளன. திருகோணமலை சந்தைப் பகுதியில் குண்டுவெடித்ததையடுத்து இன மோதல் உருவாகி இழப்புக்களும் படுகாயங்களும் ஏற்பட்டுள்ளன.இதனால் இலங்கையிலுள்ள அமெரிக்க நாட்டவர் புத்தளம் மற்றும் அனுராதபுரதம் ஊடாக திருகோணமலைக்கு செல்வதை தவிர்க்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேபோல் இலங்கையின் கிழக்குப் பகுதியில் குறிப்பாக மட்டக்களப்பில் பல குழுக்கள் மற்றும் அரச படைகள் தொடர்பில் நிலைமை மோசமடைந்து வருகின்றது.மட்டக்களப்பில் கிளைமோர் தாக்குதலும் நடைபெற்றுள்ளது.

இதன் காரணமாக அமெரிக்க நாட்டவர் இந்தப் பிரதேசங்களுக்கு செல்லும் முன்பு அல்லது இப் பிரதேசங்களில் பணியாற்றும் முன்பு தங்களது தனிப்பட்ட பாதுகாப்பை பரிசீலனை செய்துகொள்ளுமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

இலங்கை பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக அமெரிக்க நாட்டவர் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரித்தானியாவும் தமது நாட்டுப் பிரஜைகள் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறு கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(க-9)

# மீன்களைச் சந்தைப்படுத்த நவீன குளிரூட்டி வாகனங்கள் யாழ்,முல்லை மீனவர் சங்கங்களுக்கு ஜீ.ரீ.இஸட் அன்பளிப்பு

வடக்கு -கிழக்கில் மீன்பிடித் தொழிலை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவகம் ஜீ.ரீ.இஸட் தனது பங்களிப்பாக 6குளிரூட்டி வாகனங்களையும் 6சிறியவகை சுமையூர்தி வாகனங்களையும் அன்பளிப்புச் செய்யவுள்ளது.

ஜீ.ரீ.இஸட் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்பிற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சினதும் இலங்கை தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினதும் சார்பில் வடக்கு-கிழக்கு மீனவர் சமூகத்தினை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவிகள் புரிகின்றது. இந்தப் பரந்துபட்ட உதவி வழங்கலில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாக 6குளிரூட்டி வாகனங்களுக்கும் 6 சிறியவகை சுமையூர்தி வாகனங்களுக்கும் ஜேர்மன் அரச சார்பற்ற நிறுவனமாகிய உலக தரிசன நிறுவனம்(World Vision Germany) நிதியுதவி வழங்கியுள்ளது. இந்த நவீன வசதிகளுடனான வாகனத் தொகுதிகள் யாழ்ப்பாண மீனவர் சங்க சமாசங்களின் சம்மேளனத்திற்கும், முல்லைத்தீவு மீனவர் சங்கங்களின் சமாசத்திற்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை பரந்தனிலுள்ள ஜீ.ரீ.இஸட் செயற்பாட்டு மையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. இத்திட்டம் மீன்பிடி திணைக்களத்துடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனால் விரிவுபடுத்தப்படும் சந்தைப்படுத்தல் விநியோக வசதிகளால் 5000 மீனவ குடும்பங்களின்வருமானம்நிலையானமேம்பாடடையும்.

முல்லைத்தீவு மீனவர் சங்கங்களின் சமாசத்திற்கு 2குளிரூட்டி வாகனங்களும் யாழ்ப்பாண மீனவர் சங்க சமாசங்களின் சம்மேளனத்திற்கு 4குளிரூட்டி வாகனங் களும் வழங்கப்படவுள்ளது. யாழ்ப்பாண மீனவர் சங்க சமாசங்களின் சம்மேளனம் 2குளிரூட்டி வாகனங்களை யாழ்.மாவட்டத்திலுள்ள குறிப்பிட்ட மீனவர் சங்கங்களின் சமாசங்களுக்கு வாடகைக்கு வழங்கும். மற்றைய இரண்டும் அந்தப் பிரதேசத்திலுள்ள மீனவ குடும்பங்களுக்கு கொடுக்கப்படும். இதன்மூலம் அவர்கள் தாங்கள் பிடித்த மீன்களைத் தெற்கிலுள்ள சந்தைகளுக்கு அனுப்புவார்கள். இந்த நேரடியான சந்தைப்படுத்தல் முறையால் மீனவ குடும்பங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும்.

சிறிய வகை சுமையூர்தி வாகனங்களை விட மீனவ சங்கங்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும். மீன்பிடி இடங்களுக்குச் சமீபமாக 4 குளிர் பதன அறைகள் கட்டப்பட்டு அவைகளுக்கு உபகரணங்களுடன் கூடிய காரியாலயம் அமைத்துக் கொடுக்கப் படும். மீனவர்களின் சொந்த பங்களிப்புடன் ஒரு சுழற்சிமுறைக் கடன் திட்டம் உருவாக்கப்பட்டு வள்ளங்கள், வலைகள் வாங்குவதற்கு வசதிகள் செய்யப்படும். மீன் பிடித் திணைக்களம் சந்தைப்படுத்துதல், முகாமைத் துவம், வாடிக்கையாளர் சேவை, மீன் கையாளலும் பதனிடலும் பற்றிய தொழிற்பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள் மூலம் வழங்கப்படும். இதன்மூலம வீண் விரையம் தவிர்க்கப்பட்டு சுகாதார முறைகளையும் மேம்படுத்த உதவும்.இவ்வுதவியினால் மீன்பிடி சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனங்கள் அவற்றின் அங்கத்தவர்களுக்கு நல்ல முறையில் உதவக்கூடியதாக இருக்கும். தெற்கிலுள்ள சந்தைகளுக்குக் கடல் உணவுகளைக் கிரமமாக அனுப்புவதால் நல்ல வருமானமும் கிடைக்கும்.

ஜேர்மன் அபிவிருத்திக் கூட்டுறவகமும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனமும் இணைந்து முதல் முறையாகக் குளிரூட்டி வாகனங்களை வடக்கி லுள்ள மீனவர் சங்கங்கள், சமாசங்கள் , சம்மேளனத்திற்கு வழங்கவுள்ளன.

இது உலகளாவிய ரீதியில் அபிவிருத்திக்கு உதவும் ஒரு சர்வதேச நிறுவனம்.கடந்த 30 வருடங் களாக இது அரசியல், பொருளாதார , சுற்றுப்புற சூழல், சமூக அபிவிருத்திக்கு உலகளாவிய ரீதியில் உதவுகிறது. ஜீ.ரீ.இஸட் மிகவும் கடினமான சூழ்நிலைகளில் வேலைகளை மேற்கொண்டு வருகிறது.இதன் நோக்கம் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை நிலைத்து நிற்கக் கூடிய நிலையில் மேம்படுத்தலாகும். (து)

# பட்டம் வழங்கி கௌரவம்



அகில இன நல்லுறவு ஒன்றியம், சமூக, சமய, கலை, கல்வி, கலாசாரசேவைகளில் ஈடுபாடுகொண்டு தியாகங்களை மேற்கொண்டமையைப் பாராட்டி உலக சமாதான சபையின் இலங்கைக் கிளை உபதலைவர் செல்லப்பா பத்மநாதனுக்கு ''சாம ஸ்ரீதேச ஜோதி'' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

அகில இன நல்லுறவு ஒன்றியத் தலைவர் சாம ஸ்ரீ.சரத் ஆனந்த மல்லவாராச்சி தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன பட்டத்தை வழங்கினார்.

இவர் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக மன்னார் மூதூர், அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் பணியாற்றி பின்னர் சென்ரல் நிதி நிறுவனத்தின் ஆய்வாளராகவும் நிதி அளவிடல் அதிகாரியாகவும் பணியாற்றியவர்.

உலக சமாதான சபையின் இலங்கை கிளையின் உபதலைவராகவும் அகில இலங்கை சமாதானமும் அபிவிருத்தியும் நிறுவன தலைவராகவும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி நல உரிமைச் சங்கத் தலைவராகவும் அகில நல்லுறவு ஒன்றிய நிர்வாகசபை உறுப்பினராகவும் சேவையாற்றி வருகின்றார். வலிகாமம் மேற்கு பிரதேச சபையினதும் வல்வெட்டித்துறை நகர சபையினதும் உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ள இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

பூநகரி செட்டிய குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையினதும் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியினதும் பழைய மாணவரான இவர் பிரபல வர்த்தகர். சபாபதிப்பிள்ளை செல்லப்பா திருமதி.செல்லப்பா நாகம்மா தம்பதிகளின் புத்திரரென்பதும் குறிப்பிடத்தக்கது. (க-52)

# சிறுவர் இல்லங்களுக்கு வழங்கப்படும் தொகையை

## இருமடங்காக அதிகரிப்பதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

சிறுவர் இல்லங்களில் தங்கியிருக்கும் சிறுவர்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்காக வழங்கப்படும் தொகையை இரு மடங்காக அதிகரிப்பது என சிறுவர் பாதுகாப்பு, மகளிர் பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதன் பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த இல்லங்களில் வாழும் சிறுவர்களுக்கு வழங்கப்படும் தொகை 300 ரூபாவிலிருந்து 600 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

தற்போது நாட்டின் பல பாகங்களிலும் சுமார் 300 சிறுவர் இல்லங்கள் இயங்குகின்றன. அவற்றில் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

பிள்ளையொன்றுக்கு உணவு, உறைவிடம் உள்ளிட்ட வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக நாளாந்தம் ஒதுக்கப்படும் சராசரித் தொகை 10 ரூபாவை தாண்டவில்லை என்பது புலனாகியிருப்பதாக நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபயவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# வதந்திகளை நம்பாதீர்கள்!

கொலை, கொள்ளை, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், ஆட்கடத்தல் போன்றன பரவலாக இடம்பெற்று வருவதைப் பயன்படுத்தி சில விஷமிகள் வதந்திகளைப் பரப்புவதில் மும்முரமாக ஈடுபட்டு வருவதை இப்பொழுது அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இவர்கள் அடிக்கடி பலருக்கு டெலிபோன் செய்து ''.... இடத்தில் ஒருவரைச் சுட்டு விட்டார்களாம்... இந்த இடத்தில் இருவரை வெட்டிவிட்டார்களாம்...'' என்பன போன்ற வதந்திகளைப் பரப்பி பதற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள் இந்த வதந்திகளை நம்பி அந்த இடங்களுக்குச் சென்றால் அப்படி எதுவுமே நடக்கவில்லை என்பது தெரியவருகிறது.

வானொலி, ரீ.வி, பத்திரிகை செய்திகளை மாத்திரம் நம்பினால் விஷமிகளின் வதந்தி பரப்பல் நடவடிக்கை முறியடிக்கப்படுமென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (து)

# பயனாளிகளுக்கான விளக்கக் கூட்டம்

உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் கீழ் காரைநகரில் 2006 ஆம் ஆண்டுக்கான பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விளக்கக்கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

காரைநாகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் அனுசரணையுடன் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட 'நேர்ப்' பிரதித்திட்டப் பணிப்பாளர், 'நேர்ப்' உத்தியோகத்தர்கள், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு உத்தியோகத்தர்கள், தெரிவாகியுள்ள பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆயிலி, பாலாவோடை, ஊரி, நீலங்காடு ஆகிய நான்கு கிராமங்களைச் சேர்ந்த வறிய நிலையிலுள்ள 124 பயனாளிகள் வீடமைப்பு நிதியுதவி பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு இத்திட்டத்தைப் பற்றிய அறிமுகவுரையும் வீடமைப்புத் தொடர்பான தொழில்நுட்ப விளக்கங்களும் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டன திட்டத்தினால் வழங்கப்படும் விதிகள் ஒழுங்கமைவுக்கு ஏற்ப கட்டம் கட்டமாக வழங்கப்படும் நிதியுதவியை வீடமைப்புக்கே பயன்படுத்த வேண்டும் என்பது உத்தியோகத்தர்களால் வலியுறுத்தி விளக்கப்பட்டது.

மேலும் அத்திவாரம் நிர்மாணிக்கும்போது பயனாளிகள் அவதானிக்க வேண்டியவை, வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம் பற்றிய தகவல்கள் ஆகியன உள்ளடங்கிய பிரசுரங்களும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (த)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2006 யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2006 யூலை (MT) | 2006 ஓகஸ்ட் (MT) | 2006 செப்ரெம்பர் (MT) |
| 01 | சாவகச்சேரி | 70 | 70 | 70 |
| 02 | கைதடி | 30 | 30 | 30 |
| 03 | கொடிகாமம் | 80 | 80 | 80 |
| 04 | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 05 | கட்டைவேலி-நெல்லியடி | 15 | 15 | 15 |
| 06 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 07 | புலோலி | 15 | 15 | 15 |
| 08 | மருதங்கேணி | 20 | 20 | 20 |
| 09 | யாழ்ப்பாணம் | 75 | 75 | 75 |
| 10 | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11 | அச்சுவேலி | 35 | 35 | 35 |
| 12 | நீர்வேலி | 30 | 30 | 30 |
| 13 | மானிப்பாய் | 25 | 25 | 25 |
| 14 | பண்டத்தரிப்பு | 25 | 25 | 25 |
| 15 | அளவெட்டி-மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16 | தெல்லிப்பளை | 60 | 60 | 60 |
| 17 | சங்கானை | 50 | 50 | 50 |
| 18 | சுன்னாகம் | 50 | 50 | 50 |
| 19 | புங்குடுதீவு-நயினாதீவு | 25 | 25 | 25 |
| 20 | வேலணை | 20 | 20 | 20 |
| 21 | ஊர்காவற்றுறை | 20 | 20 | 20 |
| 22 | காரைநகர் | 25 | 25 | 25 |
| 23 | தீவகம் | 15 | 15 | 15 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 800 | 800 | 800 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500/= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2006.04.24ம் திகதி தொடக்கம் 2006.05.09ம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04. மீளளிக்க முடியாத கேள்விவைப்புகளாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06. பூரணப்படுத்திய இரு கேள்வி படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2006.05.10 பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்கமுடியும்.

07. கேள்வி பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் 'சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி' என எழுதப்படல் வேண்டும்.

08. கேள்விக்காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை / மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

c-310

# புத்தாண்டு பலாபலன்கள்



## துலாம்

*உடல் ஆரோக்கியம்:-* உங்களது உடல் நலம் தேறிவிடும். மனக்குழப்பங்கள் மறைந்துவிடும் பலமும் வளமும் பெறுவீர்கள். எடுக்கும் காரியத்தை முழுமை யாக செய்துமுடிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். மனைவியின் உடலநலம் மிகவும் முன்னேற்றத்தை அடையும். பிள்ளைகளின் வழியில் நிலவிய சோர்வுகளும் மருத்துவச்செலவுகளும் விலகிவிடும். தாய் தந்தைக்கு நிலவிய சர்க்கரை நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் மறைந்து சுபிட்சம் உண்டாகும்.

*கொடுக்கல் வாங்கள்:-* கொடுக்கல் வாங்கலில் சிறப்பான நிலை காணப்படும். கடந்த காலத்தின் சிக்கல்கள் யாவும் விலகி மனதில் ஒரு அமைதி உண்டாகும். கொடுத்த பணம் வட்டியுடன் வருவதால் நிம்மதி உண்டாகும். பெரிய தொகைகளையும் கொடுக்க முடியும். தொடர்ந்து காணப்பட்ட வம்பு வழக்குகளும் பைசலாகிவிடும். வண்டி, வாகனம், வீடு, மனை ஆடை, ஆபரணம் சேர்க்கை உண்டாகும். வெளியூர் வெளிநாட்டுப் பயணம் உங்களுக்கு மனதிருப்திதரும்.

*தொழில் வியாபாரம்:-* செய்கின்ற தொழில் வியாபார நிலையில் ஏற்பட்ட கடுமையான போட்டி பொறாமை களையும் எளிதாகவே சமாளித்து விடமுடியும். இது வரையில் நிலவிய நஷ்டங்களை ஈடுகட்டும் படியாக லாபம் உண்டாகும். புதிய தொழில் தொடங்குவது பெரிய முதலீடுகளில் விரிவு படுத்துவது என அதிகமான உழைப்பை மேற்கொள்வீர்கள் லாபம் கூடும். கூட்டுத்தொழிலும் கமிஷன் ஏஜன்ஸி காண்டிராக்ட் போன்றவற்றிலும் மிகவும் சிறப்பான ஏற்றமும் உயர்வும் உண்டாகும். வேலை சிலருக்கு அமையும். உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிட்டும்.

*14.04.2006 முதல் 29.06.2006 வரை*

உங்களுக்கு வெற்றி ருண ரோக ஸ்தானமான 6இல் ராகு பகவான் சஞ்சாரிப்பதும் குருபகவான் வக்ர கதியில் சஞ்சரிப்பதாலும் உங்கள் ஆரோக்கியம் பலமும் வளமுமாக சிறப்புடன் புதுப் பொலிவுடன் அமைவீர்கள். குடும்பத்திலும் மற்ற உறுப்பினர்கள் ஆரோக்கியமாகவும் சுபிட்சமாகவும் காணப்படுவார்கள். கணவன் மனைவி இடையே உறவு மிக வும் சாதகமாக அமையும். உங்களுக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட அலைச்சலும் டென்ஷனும் மறைந்துவிடும். வெளியூர் பயணங்களால் அனுகூலம் அடைவீர்கள் சிலருக்கு இக் காலத்தில் தடைப்பட்ட திருமணம் நடைபெற்று மன மகிழ்ச்சி உண்டாகும். மருத்துவ செலவுகள் வீண் செலவுகள் மறையும். உற்றார் உறவினர் நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும் பொருளாதார நிலை மிகவும் பிரமாதமாக அமைந்துவிடும். நீங்கள் பாதிகட்டிய வீட்டையும் முழுமை படுத்துவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை வண்டி, வாகன யோகமும் அமையப்பெறும். எடுக்கும் முயற்சிகளில் இருந்த தடைகள் விலகி வெற்றி மேல் வெற்றிகளை உண்டாக்கும். கொடுக்கல் வாங்கலில் சிறப்பான அனுகூலப்பலனை அடைவீர்கள். சரளமான நிலையில் தனவரவுகள் வரும் பெரிய மனிதர்களுடைய ஆதரவுகள் கிட்டும். தொழில் வியாபார நிலையில் மிகவும் சிறப்பான உயர்வுகள் உண்டாகும். போட்டிகள் பொறாமைகள் மறைந்துவிடும். லாபம் அபிவிருத்தியை கூட்டுத்தொழிலிலும் பெறுவீர்கள். நம்பிக்கை நாணயம் சிறப்படையும், கமிஷன், ஏஜன்ஸி, காண்டிராக்ட் போன்றவற்றிலும் மேன்மைகள் கூடும். உத்தியோக நிலை உங்களுக்கு ஏற்றங்களும் உயர்வும் நிறைந்ததாக இருக்கும். உங்கள் வாழ்வில் நிலவிய சோதனைகள், கவலைகள், கஷ்டங்கள் யாவும் மறைந்து மனதில் நிம்மதியும் சந்தோஷமும் உண்டாகும். கடன் தொல்லைகள் பகலவனைக்கண்ட பனிபோல மறையும். பொருளாதார நிலை மிகவும் சிறப்புடன் அமையும் சேமிப்புகள் கூடும். வீடுத மனை, வண்டி, வாகன அமைப்பும் ஆடை ஆபரண சோக்கைகளும் உண்டாகும். திருமணம் நடைபெற இருந்த தடை விலகி தடபுடலாக திருமணம் நடைபெறும். சிலருக்கு ஆண் குழந்தை பாக்கியம் அமையப்பெறும். உங்களது உடல்நலம் தேறிவிடும். அலைச்சல், டென்ஷன் குறையும், மருத்துவச் செலவுகள் மறைந்துவிடும். மனைவியின் வயிறு பாதிப்புகள் மறைந்து மன அமைதி பெறுவார்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட மன சஞ்சலம் மறைவதோடு உங்களுக்கு உதவியாகவும் அமைவார்கள். கொடுக்கல் வாங்கலில் சரளமான நிலைகளும் உண்டாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் மறைந்துவிடும். பெரிய மனிதர்களின் ஆதரவுகிட்டும். தொழில் வியாபார நிலை யில் உங்களது போட்டி பொறமைகள் யாவற்றையும் எளிதாக சமாளித்து படிப்படியாக இலாபம் உயர்வையும் அடைவீர்கள். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகள் சாதகமாக அமைவார்கள். உத்தியோக நிலையில் அதிகாரிகள் மற்றும் பணிபுரியும் உடன் தோழர்களை அனு சரித்து போவது மிகவும் உத்தமம். எதிர்பாராத இடமாறுதல் ஏற்பட்டாலும் உங்கள் நன்மையான பலனை அடைவீர்கள். மாணவர்களுக்கு அதிக மதிப்பெண் பெற முயற்சிகளும் ஆசிரியர்களின் ஆதரவும் கைகொடுக்கும்

*3.12.2006 முதல் 13.4.2007வரை*

உங்கள் ராசிக்கு தனஸ்மானமான 2இல் குருபகவான் சஞ்சாரம் செய்வது உங்களது செல்வம் செல்வாக்கு பெயர் புகழ் யாவையும் உயர்த்தும் உன்னதமான காலமாகவே அமையும் மனதில் புதிய உற்சாகம் ஏற்படும். உங்களது உடல் நலம் பிரமாதமாக அமையும். பலமும், வளமும் கூடும் எந்த ஒரு செயலையும் முழு மனதுடன் செய்து வெற்றி பெறுவீர்கள். மருத்துவச் செலவுகள் இருக்காது. மனைவியும் நல்ல உடல் நலத் துடன் காணப்படுவார். பிள்ளைகளின் வழியில் பூரிப்பு உண்டாகும் காலமாகும். உங்களுக்கு உதவியாகவும் அதே சமயம் பெருமை படக்கூடிய செயல்களில் ஈடுபடுவார்கள். சிலருக்கு இக்காலத்தில் நல்ல திருமண சுபகாரிய ரீதியாக வரன் அமையப்பெற்று சிறப்பாக திருமணம் நடைபெறும். பூரிப்புதரும் புத்திர பாக்கியமும் உண்டாகும். உற்றார் உறவினர் வருகையால் மகிழ்ச்சி யும் அனுகூலமும் உண்டாகும். நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள். பொருளாதார நிலை மிகவும் அற்புதமாக அமையும். கடன் தொல்லைகள் விலகி சேமிப்புகள் உண்டாகும். வீட்டை கட்டி குடிபுகும் அமைப்பு வண்டி, வாகன யோகமும் உண்டாகும் பெண்களுக்கு ஆடை, ஆபரணம் சேர்க்கையாகும். கொடுக்கல் வாங்கலில் மிகவும் ஏற்றமான பலன் உண்டாகும். பெரிய மனிதர்களின் ஆதமவை பெறுவிர்கள் தொழில் வியாபார நிலையில் மனமனவென லாபம் உண்டாகும். பெரிய தொகை களையும் ஈடுபடுத்தி அபிவிருத்தி செய்வீர்கள். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளிடையில் நல்ல நம்பிக்கை நாணயம் ஏற்பட்டு மேலும் லாபம் அடையமுடியும். கமிஷன், ஏஜன்ஸி, காண்டிராக்ட் இவற்றில் நல்ல ஏற்றம் ஏற்படும் உத்தியோக நிலையில் எதிர்பாராத பதவி உயர்வால் அகமகிழ்வீர்கள். விரும்பிய இட மாறுதல் கிட்டும். அரசியலில் செல்வம் செல்வாக்கு உயரும் மாணவர்கள் கல்வியில் சாதிப்பார்கள் விவசாயிகளுக்கு அரசாங்கம் மூலம் மான்ய உதவிகள் கிட்டும். கலைஞர்கள் சிறப்படைவார்கள்.

# உங்கள் ராசிக்கு எப்படி?

*உத்தியோகத்தர்களுக்கு:-* உத்தியோக நிலையில் உங்க ளுக்கு இது நாள் வரையிலும் தொல்லை தந்த உயர் அதிகாரிகளின் மாற்றத்தினால் நிம்மதி உண்டாகும். வேலைப்பளுவும் குறையும். எதிர்பார்த்த பதவி ஊதிய உயர்வுகள் இவ் வருட இறுதியில் வரும். விரும்பிய இட மாறுதலை பெற்று சிலர் குடும்பத்துடன் சேருவார்கள். புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்கள் இக்காலத்தில் சிறப்பான நிரந்தர வேலையை பெறு வார்கள். வெளியூர் வெளிநாட்டுப் பயணங்களால் அனு கூலம் உண்டாகும்.

*பெண்களுக்கு:-* உங்களது உடல்நலம் அலைச்சல் டென்ஷன் மறைந்து தேறிவிடும். மனதில் இருந்த சங்கடங்கள் யாவும் மறைந்து விடும். நிம்மதியும் சந்தோஷமும் திரும் பும். திருமணம் நடைபெற இருந்ததடைகள் விலகி தடபுடலாக இவ்வாண்டு இறுதிக்குள் நடைபெறும். சிலருக்கு ஆண் புத்திர பாக்கியமும் அமையும். கணவன்; மனைவி இடையே கலகலப்பும் ஒற்றுமையும் நிலவும். பிள்ளைகளால் உதவி கிட்டும். உத்தியோக நிலையில் உயர்வுகள் ஏற்படும்.

*மாணவ மாணவியருக்கு:-* கல்வியில் இருந்த சோர்வான நிலைமாறி உயர்வு அடைவீர்கள். ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாராட்டும்படியாக நடந்துகொள்வீர்கள். ஆசிரியர்கள் கெட்ட சகவாசம் விலகி சிறப்பான நல்ல நண்பர்கள் சேர்க்கை உண்டாகும். சிலருக்கு வண்டி வாகனம் வாங்கும் யோகம் அமையும். கனணி விஞ்ஞானம் போன்ற துறை யில் உள்ளவர்களுக்கு நவீன தொழில் நுட்பக்கருவிகளை வாங்கி உபயோகப் படுத்தி மேலும் உயர்வினை பெறுவார்கள்.

*கலைஞர்களுக்கு:-* உங்களுக்கு தொழில் ரீதியாக ஏற்பட்ட அலைச்சல் டென்ஷனும் மறைந்து சிறப்பான வாய்ப்புகள் அமையும். புதிய புதிய கதாபாத்திரங்களில் நடித்து பெயர்புகழ் வாங்குவீர்கள் சிலருக்கு அரசு மூலம் பாராட்டு பரிசுகளும் கிட்டும். இடை பாடல் டைரக்ஷன் துறையில் உள் ளவர்கள் நல்லதரமான படத்தை கொடுத்து மக்களின் ரசனைக்கு விருந்தளிப்பார்கள்.

*பொதுவாழ்வில்உள்ளவர்களுக்கு:-* அரசியல் வாதிகளின் மந்தமான நிலைகள் மாறி பெயர் புகழ் யாவும் கூடுகின்ற காலமாக அமையும். நீங்கள் நினைத்த காரியத்தை முழுமையாக முடித்துவிடமுடியும். கட்சியில் நிலவிய உட் பூசல்கள் மறைந்து ஒற்றுமையுடன் செயலாற்றுவீர்கள். உடன் இருப்பவர்களால் உதவி உண்டாகும்.

*தொழிலாளிகளுக்கு:-* தொழிலாளிகளும், முதலாளிகளும் எதையும் பேச்சுவார்த்தையில் தீர்த்து உறவை பலப்படுத்துவார்கள். கடந்த காலத்து சோதனை யாவையும் தற் போது சாதனையாக்கி விடமுடியும். நல்ல பதவியிலும் கெடுபிடிகள் வேலைபளு குறையும். நல்ல பதவி உயர்வுகளையும் பெறுவீர்கள். நிலுவைத் தொகைக்கு கிடைத்து மகிழ்ச்சி உண்டாகும். மாணவர்கள் கல்வியில் ஏற்றம் பெறுவார்கள்.

*30.06.2006முதல் 20.10.2006வரை*

உங்கள் ஜென்ம ராசியில் குரு பகவான் சஞ்சரிப்பதும் ஜீவனஸ்தானமான 10இல் சனி சஞ்சரிப்பதும் சோதனை களை ஏற்படுத்தும் அமைப்பு என்றாலும் ராகு 6இல் இருப்பதால் எவ்விதமான சோதனைகளையும் எளிதாக சமாளித்து விடமுடியும். உங்களுக்கு இக்காலத்தில் நன்மை தீமைகலந்த பலன்களே உண்டாகும். உங்களது உடல் சோர்வுகளும் அலைச்சல், டென்ஷன் சற்றேகுறையும். வாயு தொல்லை கள் ஏற்பட்டு மறையும். மனைவி மற்றும் குழந்தைகளின் உடல் நலம் சுமாராக இருக்கும் படிப்படியாக மருத்துவச் செலவுகளும் வீண் செலவுகளும் குறையும். திருமண சுபகாரிய முயற்சிகளுக்கு அனுகூலமான பலன் உண்டாகும். எடுக்கும் புது முயற்சிகளுக்கு தடையும் வெற்றி தரும் மறை முக எதிர்ப்புகள் குறையும். உற்றார் உறவினர்களை அனுசரித்து போனால் உதவிகள் குறையும். உற்றார் உறவினர்களை ஒற்றுமை சிறப்புடன் அமையும். பொருளாதார நிலையில் சற்றே தடை தாமதத்துடன் பணவரவுகள் உண்டாகும். சிக்கனமாக செலவுகளை மேற்கொண்டால் மட்டுமே சிறிதளவு சேமிக்க முடியும். கொடுக்கல் வாங்கலில் கொடுக்கும் வாக்குதிகளை சிந்தித்தே செயல்படுத்த வேண்டும். பெரிய தொகைகளை ஈடுபடுத்துவது கூடாது. வெளியூர் வெளிநாட் டுத் தொடர்புகளில் சற்று கவனம் தேவை. தொழில் வியாபார நிலையில் படிப்படியான முன்னேற்றம் உண்டாகும். தற்பொது பெரிய முதலீடுகளை ஈடுபடுத்துவதாக இருந்தால் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செயல்பட வேண்டும். கூட்டுத்தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். கமிஷன், ஏஜன்ஸி, காண்டிராக்ட் சற்றே மேன்மை தரும். உத்தியோக நிலையில் உயர் அதிகாரிகளையும் உடன் ஊழியர்களையும் அனுசரித்து போனால் உங்களது வேலைப்பளு குறைவ தோடு பதவி உயர்வும் அமையும். மாணவர்கள் முயற்சியால் மேன்மை பெறுவார் கள்.

*21.10.2006முதல் 2.12.2006வரை*

உங்களுக்கு இக்காலத்தில் குரு பகவான் தனஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வது மிக மிக அற்புதமான அமைப்பாகும் அது மட்டும் இன்றி உங்களது ராசிக்கு யோகக் காரகனாக சனி பகவானும் தனது அதிசாரசஞ்சாரத்தினால் லாபஸ் தானத்திற்கு செல்கிறார். எனவே இக்காலம் வாக்கு பெயர் புகழ் யாவையும் உயர்த்தும் உன்னதமான காலமாகவே அமையும் மனதில் புதிய உற்சாகம் ஏற்படும். உங்களது உடல் நலம் பிரமாதமாக அமையும். பலமும், வளமும் கூடும் எந்த் ஒரு செயலையும் முழு மனதுடன் செய்து வெற்றி பெறுவீர்கள். மருத்துவச் செலவுகள் இருக்காது. மனைவியும் நல்ல உடல் நலத் துடன் காணப்படுவார். பிள்ளைகளின் வழியில் பூரிப்பு உண்டாகும் காலமாகும். உங்களுக்கு உதவியாகவும் அதே சமயம் பெருமை படக்கூடிய செயல்களில் ஈடுபடுவார்கள். சிலருக்கு இக்காலத்தில் நல்ல திருமண சுபகாரிய ரீதியாக வரன் அமையப்பெற்று சிறப்பாக திருமணம் நடைபெறும். பூரிப்புதரும் புத்திர பாக்கியமும் உண்டாகும். உற்றார் உறவினர் வருகையால் மகிழ்ச்சி யும் அனுகூலமும் உண்டாகும். நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள். பொருளாதார நிலை மிகவும் அற்புதமாக அமையும். கடன் தொல்லைகள் விலகி சேமிப்புகள் உண்டாகும். வீட்டை கட்டி குடிபுகும் அமைப்பு வண்டி, வாகன யோகமும் உண்டாகும் பெண்களுக்கு ஆடை, ஆபரணம் சேர்க்கையாகும். கொடுக்கல் வாங்கலில் மிகவும் ஏற்றமான பலன் உண்டாகும். பெரிய மனிதர்களின் ஆதமவை பெறுவிர்கள் தொழில் வியாபார நிலையில் மனமனவென லாபம் உண்டாகும். பெரிய தொகை களையும் ஈடுபடுத்தி அபிவிருத்தி செய்வீர்கள். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளிடையில் நல்ல நம்பிக்கை நாணயம் ஏற்பட்டு மேலும் லாபம் அடையமுடியும். கமிஷன், ஏஜன்ஸி, காண்டிராக்ட் இவற்றில் நல்ல ஏற்றம் ஏற்படும் உத்தியோக நிலையில் எதிர்பாராத பதவி உயர்வால் அகமகிழ்வீர்கள். விரும்பிய இட மாறுதல் கிட்டும். அரசியலில் செல்வம் செல்வாக்கு உயரும் மாணவர்கள் கல்வியில் சாதிப்பார்கள் விவசாயிகளுக்கு அரசாங்கம் மூலம் மான்ய உதவிகள் கிட்டும். கலைஞர்கள் சிறப்படைவார்கள்.

*பரிகாரம்:-* உங்கள் ராசிக்கு 10இல் சனி சஞ்சரிக்கிறார். இதனால் சனி பகவானுக்கு உரிய பரிகாரங்களை சனிக் கிழ மைகளில் செய்வது உத்தமம். ஆஞ்சிநேயருக்கு துளசிமாலை வெற்றிலை மாலை வடை மாலையை சனிக்கிழமை களில் சாற்றி ஏழை உடல் ஊனமுற்றவர்களுக்கு அன்ன தானம் ஆடைதானம் அளிப்பது உத்தமம். அதுமட்டுமின்றி 20.10.2006வரை உங்கள் ஜென்மராசியில் குரு சஞ்சாரம் செய்வதால் குரு தட்சிணா மூர்த்தி வழிபாடு மேற்கெள்வது வியாழன் அன்று கொண்டைகடலை மாலையை குரு பகவானுக்கு அணிவித்து முல்லை மலர்களால் அர்ச்சனை செய்து வாருங்கள். உங்கள் சோதனைகள் விலகி நற்பலன் உண்டாகும்.

(தொடரும்)

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 95

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



தமிழ்த் திரையுலகில் களம் புகுந்திருக்கும் இளம் கதாநாயகனான இவர் '7ஜி ரெயின்போ...' புகழ் நாயகன். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-
இவரைத் தெரியுமா?
போட்டி இல:- 95
**வலம்புரி – சங்குநாதம்**
**இல–03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:–95

படத்தில் உள்ளவரின் பெயர் :-.................................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-.................................

அனுப்புபவரின் முகவரி :.................................

.................................

.................................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:–93

**சரியான விடை**





நடிகர் **ஆர்யா**

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 93 இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | வி.சங்கீதா<br>நீர்வேலி வடக்கு,<br>நீர்வேலி. |
| இரண்டாம் பரிசு | :- | தி.சிந்துஜன்<br>பலாலி வீதி,<br>திருநெல்வேலி. |
| மூன்றாம் பரிசு | :- | சி.சங்கீதா +சி.சம்பூரணி<br>க.பொ.த (உ/த) 2007 வணிகம்,<br>யா/யாழ்ப்பாணக் கல்லூரி,<br>வட்டுக்கோட்டை. |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:

செல்வி ஏ.வாசவி, அரியாலை. யோ.யோகராசா, சங்கானை. ஞா.கிருபதீசன், கைதடி. சி.கோவிந்தராஜன், நல்லூர். வே.குமாரசுவாமி, கரவெட்டி. கு.தயாமினி, இணுவில். திருமதி செ.பாக்கியநாதன், சங்கானை. சி.ஜெயருக்‌ஷன், சுன்னாகம். அ.அனுசாந், கரவெட்டி. க.பரநிருபன், நீர்வேலி. ம.விஸ்வினி, நல்லூர். ம.மைதிலி, கோண்டாவில். லோ.கீர்த்திகா, யாழ்ப்பாணம். லோ.பிரியங்கா, கந்தர்மடம். வி.தர்சினி, இணுவில். L.சுவஸ்திகா, உடுப்பிட்டி. வி.மந்தாகினி, குருநகர். வ.விதுஷன், பிறவுண் வீதி.

## பூனைக்கும் குடும்பக் கட்டுப்பாடு!

தெரு நாய்களின் தொல்லை தாங்கமுடியாததால் நாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த அவற்றைப் பிடித்து குடும்பக் கட்டுப்பாட்டு ஆபரேஷன் செய்து திரும்ப அதே பகுதிகளில் விட்டுவிடுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்.

இதேபோல் சீனாவின் சாங்காய்



மாகாணத்தின் மின்சாங் மாவட்டத்தில் பூனைகளின் தொல்லை பெரும் தொல்லையாக இருக்கிறது. இரவில் மட்டுமன்றி பகல் நேரத்திலும் பூனைகள் அந்த மாவட்ட வாசிகளுக்கு தொல்லை தருகின்றன.

இதன் காரணமாக தெருவில் திரியும் பூனைகளையெல்லாம் பிடித்துக்கொண்டுபோய் குடும்பக் கட்டுப்பாட்டு ஆபரேஷன் செய்து மீண்டும் அவற்றை பிடித்த இடத்திலேயே விட்டுவிடுகிறார்கள்.

## நரிகளின் நாட்டாமை

சீனாவில் பூனைகளின் அட்டகாசம் தாங்க முடியவில்லை என்றால் மத்திய இங்கிலாந்திலோ நரிகளால் அங்குள்ள விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு. அடர்ந்த காட்டுப் பகுதியில் வாழும் நரிகள் வயல்வெளிகளுக்குள் புகுந்து விவசாயிகளின் விளை பொருட்களை துவம்சம் செய்து விடுகின்றன.

நரிகளின் இந்தக் கொட்டத்தை கட்டுப்படுத்த வெகு காலத்திற்கு முன்பே வேட்டை நாய்களைக் கொண்டு அவைகளை வேட்டையாடுவதற்கு இங்கிலாந்தில் அனு




மதியளிக்கப்பட்டிருக்கிறது. நரிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து போனதால் கடந்த ஆண்டு இந்த நரி வேட்டைக்கு தடை விதிக்கப்பட்டது.

ஆனால் சமீபகாலமாக நரிகளின் எண்ணிக்கை பல மடங்காகப் பெருகிப் போய் வழக்கம் போல் நரிகளின் நாட்டாமை துவங்கி விட்டது. இதனால் இப்போது மீண்டும் நரி வேட்டைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

நரிகளை வேட்டையாடுவதற்காக தங்களது வேட்டை நாய்களை உசுப்பிவிட்டு குதிரைகளுடன் பாய்ந்து செல்லத் தயாராகும் விவசாயிகள்தான் இப்படி அணி வகுத்து நிற்கிறார்கள்.


## கொம்பு சாதனை



குஜராத் மாநிலம் கட்ச் பகுதியைச் சேர்ந்த ஒரு காளைமாடு கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. சாதனைக்கு உதவியாக இருந்தது அதன் நீளமான கொம்புகள்.

இந்த மாட்டின் கொம்புகளின் நீளம் 4அடி 7அங்குலம். அதிக நீளமான கொம்புகள் உள்ள மாடு என்ற சாதனையுடன் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த இந்த மாடு 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டது. அதன் பிறகு அந்த மாட்டின் கொம்புகளை மட்டும் எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டனர். பின்னர் அந்த மாட்டுக்கு என்று ஒரு நினைவு இல்லம் கட்டி அதில் அந்த மாட்டின் சிலையை நிறுவி அதில் அந்தக் கொம்புகளையும் பொருத்திவைத்துள்ளனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல–99




*அனுப்பவேண்டிய முகவரி:*
**குறுக்கெழுத்துப் போட்டி இல.- 99**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல–03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- .................................

முகவரி :- .................................

.................................

.................................

இங்கே வெட்டுக ---------------------------------- ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)நளமகாராஜனின் மனைவி. (5)தவறு - எதிர்க்கருத்து. (6)'கவை' என்ற பொருளிலும் வரும். (8)கண்ணதாசனின் இவை தத்துவமும் சுவையும் மிக்கனவாக இருக்கும். (9)முள் நிறைந்த ஒருவகைச் செடி. (11)சுவாசப்பையைப் பாதிக்கும் ஒரு நோய். (14)அன்னை. (15)ஐவகை நிலங்களில் ஒன்று. (16)வணங்குதல்- இப்படியும் அழைப்பர்.

### மேலிருந்து கீழ்

(1)இராவணனை இப்படியும் அழைப்பர். (2)இயேசு கிறிஸ்துவின் தாய். (3)'திரைகடல் ஓடியும் இதைத் தேடு' என்பர். (4)இது இறந்தாலும் ஆயிரம் பொன். இருந்தாலும் ஆயிரம் பொன் என்பர். (7)நமது உடலில் எலும்பு, நரம்புகளுக்குப் பாதுகாப்பளிக்கும் இதனை இப்படியும் அழைப்பர். (10)ஒரு பாவின் இறுதியில் அடுத்த பா தொடங்கும் பாவகைகளில் ஒன்று. (12)நாறு - இதனைக் குறிக்கும். (13)முகத்தில் தோன்றி அழகைக் கெடுப்பது. (14)பெண்ணை இப்படியும் அழைப்பர்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல - 97 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1.அமாவாசை | 4.ஆதி | 6.தவளை | 7.குமரன் | 9.பாகு |
| 10.சதுர் | 11.அல்வா | 12.சவூதி | 15.கோமுகி | 17.வீதி |
| 18.வால்மீகி | | | | |

### மேலிருந்து கீழ்

| | | | |
|---|---|---|---|
| 1.அங்குசம் | 2.வாதவூரர் | 3.சைவன் | 5.திக்குவாய் |
| 8.மது | 9.பால் | 11.அசமுகி | 13.திகில் |
| 14.விதி | 16.கோவா | | |

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | செ.பரந்தாமன்<br>கட்டுடை,<br>மானிப்பாய். |
| இரண்டாம் பரிசு | :- | த.சங்கர்<br>வட்டு.தெற்கு,<br>வட்டுக்கோட்டை. |
| மூன்றாம் பரிசு | :- | திருமதி ஏ.சர்மிளா<br>இல.27/1, கலைமகள் றோட்,<br>அரியாலை. |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறுவோரின் பெயர் விபரம்:

இ.யூஜினா மரியா, குருநகர். யோ.விக்டர் அரவிந்தன், சண்டிலிப்பாய். ப.சிவசூரியர், சங்கானை. க.பிரதாப், நீர்வேலி. ஞா.நளினி, கைதடி. எஸ்.கோவிந்தராஜன், நல்லூர். ரி.எஸ்.சயந்தன், வட்டுக்கோட்டை. க.ஞானோதயன், தெல்லிப்பளை. ஏ.இரத்தினம், கோப்பாய். பொ.சுப்பிரமணியம், யாழ்ப்பாணம். ம.மைதிலி, கோண்டாவில்.

## இந்திய மாணவருக்கு கத்திக்குத்து ரஷ்ய இனவெறியர்கள் அட்டகாசம்

(மாஸ்கோ)

இந்திய மாணவர் ஒருவர் ரஷ்யாவில் கத்தியால் குத்தப்பட்டார். இனவெறியினால் இந்தத் தாக்குதல் நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் பெர்க் நகரில் மெக்னிகவ் மருத்துவ அக்கடமியில் ஐந்தாம் ஆண்டு பயிலும் இந்திய மாணவர் ஆஞ்ஜனிகுமார். இவர் கடந்த புதன்கிழமை இரவு தனது விடுதிக்கு திரும்பிக்கொண்டிருந்த போது சில மர்ம நபர்கள் இவரைத் தாக்கி கத்தியால் குத்திவிட்டு தப்பியோடினர். கழுத்தில் கத்திக்குத்து காயத்துடன் உடனடியாக அந்த மாணவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் அபாய கட்டத்தைத் தாண்டிவிட்டதாகவும், இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைத் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சர்வாதிகாரி ஹிட்லரின் பிறந்தநாள் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டதை முன்னிட்டு இந்த மாத தொடக்கத்திலிருந்தே ரஷ்ய இனவெறியாளர்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் தாக்குதல் நடத்தி வருகின்றனர். முன்னதாக சீன மாணவி ஒருவர் அவரது அடுக்குமாடி குடியிருப்புக்கு வெளியிலேயே தாக்கப்பட்டார். கடந்த 7 ஆம் திகதி ஆபிரிக்க மாணவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். கடந்த ஞாயிறன்று சுரங்கப் பாதையில், இரண்டு மங்கோலியர்கள் தாக்குதலுக்குள்ளாயினர்.

கடைசியாக, இந்திய மாணவர் தாக்கப்பட்டதை அடுத்து, பொது இடங்களில் பாதுகாப்புக்குப் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். இருப்பினும், ஏராளமான ஆசிய ஆபிரிக்க குடிமக்களும் மாணவர்களும் அச்சத்துடன் வீட்டிலேயே முடங்கிக்கிடந்தனர். (த)

## நியூசிலாந்திலிருந்து இந்திய தூதுவரை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டவர் ஹரீஷ் கோக்ரா இவர் மீது பல்வேறு புகார்கள் கூறப்பட்டன.

இதைத் தொடர்ந்து இந்திய அரசு கடந்த மார்ச் மாதம் இவரை தூதுவர் பதவியிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டது. உடனடியாக நாடு திரும்பவும் உத்தரவிட்டது.

அவருக்குப் பதில் புதிதாக நியூசிலாந்தின் இந்திய தூதுவராக கே.பி.எர்னஸ்ட் நியமிக்கப்பட்டார்.

பதவி பறிக்கப்பட்ட பிறகும் ஹரீஷ் கோக்ரா இந்தியா திரும்பாமல் நியூசிலாந்திலேயே தங்கிவிட்டார். இந்தியா திரும்பவும் அவர் மறுத்துவிட்டார். அவரது மனைவியும் அங்கேயே தங்கியிருக்கிறார்.

நாங்கள் நியூலாந்தை மிகவும் நேசிக்கிறோம். நாங்கள் இந்தியா திரும்பமாட்டோம். எங்களை இங்கேயே தங்கியிருக்க நியூசிலாந்து அரசு அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து ஹரீஷ் கோக்ரா மற்றும் அவரது குடும்பத்தினரை வலுக்கட்டாயமாக வெளியேற்ற நியூசிலாந்து அரசு முடிவு செய்துள்ளது. முறைப்படி அனுமதி பெறாமல் அவர்கள் தங்கியிருந்ததால் அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதை தவிர வேறு வழியில்லை என்று நியூசிலாந்து பிரதமர் ஹெலன் கிளாசிக் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். (கு)

## புஷ்ஷை கொல்லும்படி இணையத்தில் செய்தி!

### இந்திய மாணவன் கைது

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் இணையத்தளம் ரகசிய செய்தி தளத்தில் சமீப காலமாக வன்முறையை பரப்பும் வகையில் செய்தி அனுப்பப்பட்டு வந்தது. அதில் அதிபர் புஷ் துணை அதிபர் ஷெனால் மற்றும் அவர்களது குடும்பத்தினரை கொல்லுங்கள். முக்கிய இடங்களை குண்டுவைத்து நாசமாக்குங்கள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதை அனுப்பியவர் யார்? என்பதை கண்டுபிடிக்க அமெரிக்க புலனாய்வுதுறையினர் விசாரணை நடத்தினார்கள்.

அதில் விக்ரம் புத்தி (வயது -34) என்ற மாணவர் இந்தச் செய்தியை அனுப்பி இருந்தது தெரிய வந்தது.

அவர் அங்குள்ள புந்தியு பல்கலைக்கழகத்தில் படித்து வந்தார். இவர் இந்தியாவை சேர்ந்தவர்.

மாணவர்களுக்கான விசாவில் 1996 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்றார்.

விக்ரமை பொலிஸார் கைதுசெய்தனர். இணையத்தளத்தில் பல்வேறு இரகசிய முகவரியை பயன்படுத்தி இதுபோல பல செய்திகளை பரப்பியதாக விக்ரம் கூறினார்.

விசாரணைக்குப்பின் சிறையில் அடைக்கப்பட்ட அவர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். (க)

## ஐ.நா. சபையின் பாதுகாப்பு குழுவில் இந்தியா இடம்பெற உதவி செய்வோம்!

### என்கிறார் அமெரிக்க தூதரக அதிகாரி

(சென்னை)

சென்னையில் உள்ள ஐ.ஐ.டியில் தென் இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரி டேவிட் டி.ஹாப்பர் நேற்றுமுன்தினம் உரை நிகழ்த்தினார்.

அமெரிக்க ஜனாதிபதி இந்தியாவுக்கு வந்து சென்றபிறகு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவு மேலும் வலுவடைந்து உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் உலக நாடுகளில் இந்தியாவும் ஒரு முக்கிய நாடு ஆகும். அது மட்டுமல்ல இந்தியாவின் இருப்பிடம் உலக நாடுகளின் மத்தியில் அமைந்துள்ளது. ஐக்கிய நாட்டு சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா இடம்பெற உதவி செய்வோம். ஐக்கிய நாடு சபை விரிவுபடுத்தப்படவேண்டும். மேலும் உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

ஏற்கனவே ஐக்கிய நாடு சபையில் பல சீரமைப்புகள் செய்யப்பட்டுள்ளன. புஷ்ஷின் இந்திய பயணம் வெற்றிகரமாக அமைந்தது. அப்போது இரு நாடுகளின் பொருளாதாரம், சுகாதாரம், வர்த்தகம், அறிவுசார் சொத்து ஆகியவை பற்றி பேசப்பட்டது. இவ்வாறு டேவிட்டி ஹாப்பர் பேசினார். இந்த நிகழ்ச்சியில் ஐ.ஐ.டியின் இயக்குனர் எம்.எஸ்.அனந்த், பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (க)

### இந்திய வலம்

## 2 மாணவிகளை கற்பழிக்க முயன்ற தலைமை ஆசிரியர்

(காளகஸ்தி)

ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளத்தில் உள்ள அரசினர் உயர் நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருபவர் முரளிதர். குடிப்பழக்கம் உடையவர்.

இவர் 9மற்றும் 10ஆம் வகுப்பில் பாடம் நடத்தும்போது மாணவிகளிடம் வேண்டுமென்றே கஷ்டமான கேள்வியை கேட்பாராம். பதில் தெரியாமல் விழிக்கும் மாணவிகளை 2 கைகளையும் தூக்கிக் கொண்டே நிற்க வைப்பாராம். அப்போது அவர்களது இடுப்பில் கிள்ளி சில்மிஷமம் செய்வாராம்.

இதை தட்டிக் கேட்கும் மாணவிகளை பிரம்பால் அடிப்பாராம். இதனால் அவரைக் கண்டால் மாணவிகள் அஞ்சி நடுங்குவார்கள்.

இந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் காலையில் பாடம் நடத்திக்கொண்டிருந்தபோது இரு மாணவிகளைத் தனது அறைக்கு வரச் சொன்னார். நீங்கள் இந்த ஆண்டு பாஸ் ஆகவேண்டும் என்றால் இன்று மதியம் நான் சொல்லும் லாட்ஜுக்கு வந்து விடுங்கள் என்று மிரட்டினார்.

பயந்துபோன அவர்கள் மதியம் 1 மணிக்கு அங்கு சென்றனர். முரளிதர் அந்த மாணவிகளை ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

தான் தயாராக வைத்திருந்த மதுபானத்தை கொடுத்து குடிக்கச் சொன்னார். அதற்கு அவர்கள் மறுக்கவே இருவரது வாயிலும் வலுக்கட்டாயமாக மதுவை ஊற்றினார்.

அடுத்த கட்டமாக அவர்கள் மீது பாய்ந்து கற்பழிக்க முயன்றார். உடனே இருவரும் கதவை பலமாகத் தட்டி கூச்சல் போட்டனர். இந்த அலறல் சத்தத்தை கேட்டு லாட்ஜ் ஊழியர்கள் அறைக் கதவை உடைத்து உள்ளே சென்றனர்.

வெறியுடன் காணப்பட்ட முரளிதரை பொலிஸில் ஒப்படைத்தனர். பொலிஸார் அவர் மீது வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தனர்.

மாணவிகளை கற்பழிக்க முயன்ற தலைமை ஆசிரியரை டிஸ்மிஸ் செய்யக் கோரி அப்பகுதி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். இதையடுத்து மாவட்ட கல்வி அதிகாரி தலைமை ஆசிரியர் முரளிதரை சஸ்பெண்ட் செய்தார். (து)



கேரள மாநிலம், பெரும்பாவூரில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் கலந்துகொண்டபோது...

## தி.மு.க.வில் சரத், ராதிகாவுக்கு நெருக்கடி கொடுத்தது யார்?

ராடன் ரீ.வி நிறுவனம் சார்பில் வெளிநாட்டில் புதிய ரீ.வி சேனல் தொடங்கும் திட்டத்தின் காரணமாகவே ராதிகாவுக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இப்பிரச்சினையில் தான் தி.மு.கவில் இருந்து ராதிகா வெளியேறி இருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தி.மு.க விலிருந்து சரத்குமாரும் அவரது மனைவி ராதிகாவும் விலகியது தொடர்பாக பரபரப்பான தகவல்கள் தினந்தோறும் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. 'ஒரு குடும்பத்தின் பிடியில் தி.மு.க சிக்கியுள்ளது' என்று சரத்குமார் கூறியிருந்தார். கருணாநிதியைச் சுற்றி உள்ளவர்களால் எனக்கு நெருக்கடி அதிகமாகி வருகிறது. எனக்கும் ராதிகாவுக்கும் பாதுகாப்பு இல்லை என்றும் அறிக்கையில் கூறியிருந்தார்.

தி.மு.கவில் அவருக்கு கொடுக்கப்பட்ட நெருக்கடி பற்றி பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. 'ராடன் ரீ.வி' நிறுவனத்தை ராதிகா நடத்தி வருகிறார். இந்த நிறுவனம் சார்பில் பல்வேறு ரீ.வி தொடர்கள் எடுக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. ராதிகா நடத்தி வரும் ராடன் ரீ.வி. ஒரு பொது நிறுவனம். இதற்கு பங்குகள் வெளியிடப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் உள்ள தமிழ் சேனல்களும் ராடன் ரீ.வி. தயாரிக்கும் நிகழ்ச்சிகளை வாங்கி ஒளிபரப்பி வருகின்றன. இதன் மூலம் பல கோடி ரூபாவை வர்த்தகம் செய்து வரும் ராதிகா, மலேசியா மற்றும் இலங்கையில் ரீ.வி சேனல் தொடங்க திட்டமிட்டதாக கூறப்படுகிறது. அதற்காக முழு முயற்சியில் இறங்கியபோது தான் ராதிகாவுக்கு பிரச்சினை தொடங்கியது.

வெளிநாட்டில் ரீ.வி சேனல் தொடங்கியவர்கள் நாளை தமிழகத்திலும் கால் ஊன்றி விடுவர் என்று அச்சப்பட்டு முதலிலேயே அவர்களின் வளர்ச்சியை தடுக்கவும் திட்டமிடப்பட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே தி.மு.கவில் பல அரசியல் காரணங்களால் சரத்குமார் அதிருப்தி அடைந்த நிலையில் இருந்தார். இந்த நிலையில் ராதிகாவுக்கும் தி.மு.க தலைவர் கருணா நிதிக்கும் நெருக்கமானவர்கள் மூலம் பிரச்சினை வளர்ந்துகொண்டே போனதால்தான் ராதிகாவும் சரத்குமாரின் முடிவுக்கு ஆதரவு அளித்து தி.மு.கவிலிருந்து விலகி அ.தி.மு.கவில் சேர ஒப்புக்கொண்டார். (க)



அசாம் மாநிலம் சருபேட்டா என்ற இடத்தில் பஸ் ஆற்றில் பாய்ந்ததில் பலியான 47 பயணிகளின் உடல்களை மீட்கும் பணி நடந்து வருகிறது.

# நெல்சன் மண்டேலா

து. பாண்டியன்

## மீள்பார்வை

23



வால்டர் சிசுலு தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர்களுள் ஒருவர். நோபல் பரிசு பெற்றவர்.

★ நம் வாழ்நாளில் நமக்குச் சுதந்திரம் வேண்டும்.

★ ஆபிரிக்காவில் வாழும் சகல மக்களுக்கும் சுதந்திரம் வேண்டும்.

★ எல்லோரும் சேர்ந்து குரல்கொடுப்போம்.

★ எல்லோரும் சேர்ந்து போராடுவோம்.

★ எல்லோரும் சேர்ந்து விடுதலை பெறுவோம் என்ற முழக்கங்கள் நாடு முழுமையிலும் எதிரொலித்தன. எங்கும் சுதந்திரம் என்ற பேச்சுப் பரவியது.

★ எல்லோரும் சேர்ந்து சுதந்திர மகாசாசனத்தை எழுதுவோம் என்று குரல் எழுப்பப்பட்டது.

ஜோகன்ஸ்பர்க்கிற்கு சில மைல் தூரத்திலிருந்த கிளிப்டவுன் என்ற நகருக்கு அருகிலிருந்த ஒரு பரந்த வெளியில், 1955ஜுன் 25, 26 திகதிகளில் மாநாடு கூடியது. பொலிஸாரின் உருட்டல், மிரட்டல் தடைகளைத் தாண்டி 3000 பிரதிநிதிகள்,வண்டி வாகனங்களிலும் நடந்தும் வந்து சேர்ந்தனர்.இவர்களில் 300க்கும் அதிகமானவர்கள் இந்திய வம்சாவழியினர். 200பேர் பல நிறத் தவர்.(ஆபிரிக்கர் அல்லாதவர்) 100பேர் சுத்த வெள்ளையர்கள். மண்டேலாவுக்கும் வால்ட் டருக்கும் தடை இருந்ததால் காரில் போய், கூட்டத்திற்குள் போகாமல் வெளியில் நின்றனர்.நம்வாழ்நாளில் சுதந்திரம் வேண்டும். அனைவர்க்கும் சுதந்திரம் வேண்டும். சேர்ந்து போராடுவோம் என்ற முழக்கங்கள் வெகு தூரத்திற்குக் கேட்டது. விண்ணைக் கலக்கியது. ஆபிரிக்க தேசியப் பாடல்களையும் பாடினார்கள்.மக்களின் மகாசாசனம், ஆங்கிலம், சோதோ, சோசா மொழிகளில் வரிவரியாக வாசிக் கப்பட்டு, மக்களின் முழக்கத்திற் கிடையே நிறைவேற்றப் பட்டது.

முதல்நாள் மாநாடு வெற்றிகரமாக நடந்தேறியது. இரண்டாம் நாளும், அதேபோல நிகழ்ச்சிகள் முறைப்படி நடந்துகொண்டிருந்தன. பிற்பகல் 3.30மணி அளவில் ஸ்டென் துப்பாக்கிகளுடன் ஏராளமான பொலிஸார், மாநாட்டிற்குள் நுழைந்தனர். ஒலிபெருக்கியைப் பறித்தனர். எல்லோரையும் அடிக்கத் தொடங்கினர். எல்லாக் காகிதங்களையும் கைப்பற்றினர். இத்தனை ரகளை நடைபெறுகிறபோது, பிரதிநிதிகள் கூட்டாக சுதந்திர கீதத்தைப் பாடிக்கொண்டிருந்தனர். கூட்டத்திற்குள் நுழைய மண்டேலா நினைத்தாலும், அது சௌகரியமாகப் பொலிஸார் கைதுசெய்ய உதவக்கூடும் என்பதாலும், அவசரக் கூட்டம் ஜோகன்ஸ்பர்க்கில் கூட்டப்பட்டதாலும், அங்கே மண்டேலா விரைந்தார்.

அமெரிக்கா சுதந்திரம் பெற்றவுடன் வெளியிடப்பட்ட சுதந்திரப் பிரகடனத்தைப் போலவும், பிரான்சில் மக்களின் மனித உரிமைகள் என செய்யப்பட்ட பிரகடனத்தைப் போலவும், கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிடப்பட்ட போது கிடைத்த அதே வரவேற்பைப் பெற்றது. நடைமுறை இலட்சியங்களையும், கவிதை நடையையும் கொண்டதாக அது அமைந் திருந்தது. மக்கள் ஒரு புத்துலகைப் பற்றி கனவு காணத் தொடங்கினர். அந்த மகாசாசனம் தொடக்கத்திலேயே தென் ஆபிரிக்காவில் வாழும் கருப்பர், வெள்ளையர் என்ற வேறுபாடு இல்லாமலும் பெரும்பான்மை மக்களின் ஒப்புதலைப் பெற்ற அரசு அமைப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

✶ நமது மக்களின் பிறப்புரிமைகள் பறிக்கப்பட்டன.

✶ நிலம் பறிக்கப்பட்டது.

✶ ஏற்றத் தாழ்வையும், அநீதியையும் அடிப்படையாகக் கொண்ட அரசு இருந்து வருகிறது.

✶ இதனைத் தள்ளி ஜனநாயக அடிப்படையில் மக்களின் ஒப்புதலோடு மத, இன, நிற,பால் வேறுபாடுகள் காட்டாத ஓர் அரசு அமைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த மகாசாசனத்தை வெளியிடுகிறோம்.

✶ இங்கு வாழும் ஆண், பெண் அனைவருக்கும் வாக்களிப்பதற்கும்,தேர்ந்தெடுக் கப்படுவதற்கும் உரிமையை வழங்குவோம்.

✶ எல்லா மக்களுக்கும் அரசு நிர்வாகத்தில் பங்கெடுக்கும் வாய்ப்பை வழங்குவோம். இப்பொழுதுள்ள சிறுபான்மையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அமைப்புகள் கலைக் கப்படும்.

✶ அரசு நிர்வாகத்திலும், நீதிமன்றங்களிலும் தேசிய இனங்களுக்கும் சகல வாய்ப்பு வழங்கப்படும். அனைத்து இன, குழுக்களுக்கும் பாதுகாப்புத் தரப்படும். மக்களின் தாய் மொழிகளுக்கும், கலாசாரம் , பழக்கவழக்கங்களுக்கும் பாதுகாப்புத் தரப்படும்.நிறம், இனம் ஆகியவற்றை இழிவுபடுத்திப் பேசுவோர் தண்டிக்கப்படுவர். இன ஒதுக்கீடு சட்டம் அனைத்தும் கிழித்து எறியப்படும்.

✶ நாட்டின் இயற்கை வளங்கள் அனைத்தும் ஆபிரிக்க மக்களுக்கே சொந்தம் எனப் பிரகடனப்படுத்துகிறோம்.

✶ சுரங்கங்கள், வங்கிகள், ஏகபோகத் தொழில் நிறுவனங்கள் சமுதாய உடமையாக் கப்படும்.

✶ இதர தொழில்கள் மற்றும் வணிக நிறுவனங்களும் மக்களின் நலனுக்கு ஏற்ப நடத்துமாறு கட்டுப்படுத்தப்படும். தொழில் தொடங்கவும், நடத்தவும் அவரவர் திறமைக் கேற்ப பணிகளில் ஈடுபடவும் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

இறுதியாக, அடிப்படையில் செய்யப்பட்டுள்ள நிலப் பங்கீடு ரத்துச் செய்யப்பட்டு, நிலத்தில் உழைப்போருக்கு நிலம் மீண்டும் பகிர்ந்து அளிக்கப்படும்.இவைதான், மகாசாசனத்தின் சாரமாகும்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆபிரிக்கர்களுக்கு மட்டுமே என்று கோரியவர்கள், கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர்களாகவும், இந்தியர்களை எதிர்ப்பவர்களாகவும், வெள்ளையர்களை எதிர்ப்பவர்களாகவும் இருந்தனர். இவர்கள் இந்த சாசனத்தைப் படித்தவுடன் கண்டிக்கத் தொடங்கினர். வெள்ளைக்கார கம்யூனிஸ்டுகள், ஆபிரிக்க தேசிய காங்கிரஸை கபளீகரம் செய்துவிட்டனர் என்றும், சோசலிஸ்ட் சமுதாய அமைப்புக்கு முயற்சிக்கிறார்கள் என்றும் குற்றம்சாட்டினர்.ஆனால்,சாசனத்தில் ஆபிரிக்கர்கள், தொழில் நடத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அது, வங்கிகளையும் சுரங்கங்களை மட்டும்தான் அரசுடைமை என்று அறிவித்திருந்தது. அது ஆபிரிக்கப் பொருளாதாரத்தை சீர்திருத்த அவசியம் இருந்தாலும், விமர்சகர்கள் குறிப்பிட்டதைப் போல சாசனம் ஒரு புரட்சிகரப் பிரகடனம்தான்.அவற்றை நிறைவேற்றவேண்டுமெனில் தீவிர அரசியல், பொருளாதார மாற்றங்கள் தேவை என்பதையும் அறிவோம். ஆனால் அவற்றை செய்யாமல் ஆபிரிக்க மக்களை முன்னேற்றமுடியாது என்பதை மண்டேலா போன்றோர் உணர்ந்தனர். அதையே மக்களிடமும் பிரச்சாரம் செய்து வந்தனர். (தொடரும்)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினால்

### யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி கோரல்-யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர்-2006

1) யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு கீழ்க் குறிப்பிட்ட அளவிலான மெற்றிக்தொன் கோதுமைமா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. மா பின்வரும் அடிப்படையில் விநியோகம் செய்யப்படல் வேண்டும்.

| விநியோகிக்க வேண்டிய மாதம் | அளவு |
|---|---|
| 2006 யூலை | 400Mt |
| 2006 ஓகஸ்ட் | 400Mt |
| 2006 செப்ரெம்பர் | 400Mt |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2006.04.24 ஆம் திகதி தொடக்கம் 2006.05.09ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2)கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி-Bid Bond)மெற்றிக்தொன் ஒன்றிற்கு (01Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00)செலுத்துதல் வேண்டும்.(விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

3.பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது)அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2006.05.10ஆம் திகதி பி.ப.2.00மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

4)நீள தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்படவேண்டும்.

5)ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக-PERFORMANCE BOND)செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6)கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்
தலைவர்/அரச அதிபர்
மாவட்ட கேள்விச்சபை/
மாவட்டச் செயலகம்.
யாழ்ப்பாணம்.

(C/309)

## வவுனியாவில் இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியா மகரம்பைக்குளம், குட்டிநகர் பகுதியில் துப்பாக்கிச்சூடு மற்றும் வெட்டுக்காயங்களுடன் இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் 6மணியளவில் பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைகள் கட்டப்பட்ட நிலையிலும், வாய் பிளாஸ்ரரால் ஒட்டப்பட்ட நிலையிலும் முகம் துணியினால் கட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்ட இந்த இளைஞர்களின் சடலங்கள் இதுவரை அடையாளம்காணப்படவில்லை.

இவர்களை யார் கொன்று, குறித்த பகுதியில் கொண்டுவந்து போட்டார்கள் என்பது தொடர்பான தகவல்கள் எதுவும்கிடைக்கவில்லை. எனினும் ஒரு சடலத்தின் காலிற்குகீழே தமிழ்த் தேசியப் படை , புதுக்குளம் வவுனியா என எழுதப்பட்டுள்ள பிரசுரம் ஒன்று காணப்பட்டதாகத் தெரிகிறது. (ச)

## சமதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தேசிய தலைமையக ஆளுநர் சபை உறுப்பினரும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வடக்கு-கிழக்கு இணைப் பாளரும் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் உப தலைவருமான குலசேகரம்பிள்ளை பாலகிருஷ்ணன் அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர்யாழ்.மாவட்டகிராமஅபிவிருத்தி அதிகாரியாகவும் வடக்குக் கிழக்கு கிராம அபிவிருத்தித் திணைக்கள பிரதிப் பணிப்பாளராகவும்கடமையாற்றி ஓய்வுபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-134)

## முதலாம் திருமுறை முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் மாதம் ஒருகோயில், மாதம் ஒரு திருமுறை என்ற வகையில் நாட்டில் நிரந்தர சமாதானம் வேண்டி பன்னிருதிருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டில்பிரசித்திபெற்ற ஆலயங்கள் தோறும் சென்று நடாத்தி வரும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் வண். கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சித்திரை மாதம் 14 ஆம்திகதி முதலாம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தினமும் மாலைப் பூசையைத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.இவ்வாலயத்தில் வைரவர் கோயில் மணிக்கூட்டுக்கோபுரமும் ஆகியவை ஒரு தனி நபரின் உபயமாகத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஓ)




# புன்னகையை தொலைக்கலாமா?



‘‘எப்படிப் பூக்களுக்குச் சூரிய ஒளியோ அப்படியே மானிட வர்க்கத்திற்குச் சிரிப்பு’’ என்கிறார் அடிசன்.

தவிர்க்க இயலாத, எதிர்பாராத இழப்பு, சோகம் இவற்றால் முகம் புன்னகையை இழப்பது உறுதி என்றாலும் யார் யார் முகத்தில் புன்னகையைப் பார்க்க முடியாது என்று சற்று மனோதத்துவ ரீதியாகப் பார்ப்போமா?

அடிப்படையாக மனதின் ஆழத்தில் தாழ்வு மனப்பான்மை கொண்டவர் முகத்தில், புன்னகை என்ன விலை? என்று கேட்க வேண்டியிருக்கும். மனப்பயிற்சி செய்து தாழ்வு மனப்பான்மையை சிறிது சிறிதாக போக்கிக் கொண்டாலே போதும், புன்னகை முகத்தில் எட்டிப் பார்க்க ஆரம்பிக்கும்.

தன்னை மற்றவரோடு எந்நேரமும் ஒப்பிட்டுப் பார்ப்பவர், குறிப்பாக தன்னைவிட ஏதாவது ஒரு விதத்தில் தகுதியில் உயர்ந்தவரோடு ஒப்பிட்டுப் பார்த்து மனதில் ஒருவித சோகம் குடியேற, புன்னகை என்றால்



என்ன? என்று கேட்பார்கள்.

கடந்த கால சோக நிகழ்ச்சிகளையே மனதில் அசை போட்டுக் கொண்டிருப்பவர் முகத்திலும் கவலை ரேகைகள் எந்நேரமும் படர்ந்திருக்கும். தேவையற்ற பயம் சிலரை ஆட்டிப் படைக்க மனதில் நிம்மதியை அடியோடு பறிகொடுத்தபடி உலவி வருவார்கள். எதிர்காலத்தில் என்னவாகுமோ எனும் கற்பனை. இந்த நோய் தனக்கு இருக்குமோ எனும் பயம். ஏதேனும் விபத்து நடந்துவிடுமோ எனும் பீதி... இப்படி எதையாவது ஒன்றை கற்பனை செய்து முகமே களை இழந்து காணப்படுவார்கள். எந்நேரமும் ஏதாவது ஒரு வேலையில் தன்னை ஈடுபடுத்தி கற்பனைகளுக்கு இடம் கொடுக்காமல் வாழப் பழகினாலே போதும் இந்த எண்ணம் மாறிவிடும்.

அடுத்து போதுமென்ற மனம் இல்லாதவர்கள் முகத்திலும் புன்னகையைப் பார்க்க முடியாது. இரண்டடி அகலமாக வீடு அமையவில்லையே என்பது முதல், பட்டுப் புடவையில் அரை இஞ்ச் கரை அதிகம் இல்லையே என்பது வரை பலருக்கும் பலவிதமான கவலைகள். இந்தக் கவலை ரேகைகள் படர்ந்த முகத்தில் புன்னகை ரேகைக்கு இடம் ஏது?

‘‘வாழ்க்கைப் பாதையை மலர்களால் தூவ முடியாவிட்டாலும் குறைந்த பட்சம் சிரிப்புக்களால் தூவுங்கள்’’ என்கிறார் சார்ள்ஸ் டிக்கன்ஸ்.

‘‘ஒருவன் சிரிக்கும் நேரத்திலெல்லாம் ஓர் ஆணி அவன் சவப்பெட்டியிலிருந்து நீக்கப்படுகிறது’’ என்கிறது ஆங்கிலேயே பொன்மொழி.

### எந்நேரமும் சிரித்த முகமாய் இருக்க இதோ சில டிப்ஸ்

உங்களைவிட வயது குறைந்தவர்களுடன் ஜோக்காகப் பேசி சிரித்தபடி உங்கள் ஓய்வு நேரத்தைப் போக்குங்கள்.

தொலைக்காட்சியில் காமெடிக் காட்சிகள் எப்போது ஒளிபரப்பாகின்றன எனத் தெரிந்து கொண்டு பார்த்துக் கவலைகளை மறந்து சிரியுங்கள்.

எதிலெல்லாம் உங்களுக்குச் சந்தோஷம் கிடைக்கிறது என்பது மற்றவரைவிட உங்களுக்கே அனுபவ பூர்வமாகத் தெரியும். அதிலெல்லாம் ஈடுபட்டு மனதைக் குதூகலமாக வைத்துக்கொள்ளுங்கள்.

யாரையும் புன்னகையுடன் வரவேற்கப் பழகுங்கள். யாருக்கும் புன்னகையுடன் விடை கொடுங்கள்.

‘இன்று முழுவதும் புன்னகையுடன் சந்தோஷமாக இருப்பேன்’ என்று கூறிக்கொண்டே எழுந்து காலைப் பணிகளைத் தொடங்குங்கள். புன்னகை தவழும் முகத்துடன் இருக்கப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

கடைப்பிடித்துப் பாருங்கள்... பிடியுங்கள் இதோ! புன்னகை அரசி பட்டம் உங்களுக்குத் தான்!

# அழகே உன்னை ஆராதிக்கிறேன்!



முகத்தில் வரும் பருக்களைத் தான் அக்னே என்கிறோம். சருமத்தில் எண்ணெய்ப் பசை அதிகம் வழியும்போது அனைவருக்கும் வரக்கூடிய ஒரு பொதுவான சரும நோய் இது.

ஒவ்வொருவருக்கும் வரும் அக்னே வித்தியாசப்படும். ஒரு சிலருக்கு கறுப்பு கறுப்பாக பருக்கள் இருக்கும்.

சிலருக்கு கட்டிகளிலிருந்து சீழ் வெளியாகும். இன்னும் சிலருக்குக் கொப்புளங்கள் கூட ஏற்படும். இவை ஏற்பட்டவுடன் உடனே டாக்டரை அணுகவும் என்கிறார் பிரபல ஆயுர்வேத நிபுணர் டாக்டர் ரேகா. இவர் சென்னை மகாலிங்கபுரத்தில் அப்பல்லோ ஆயுர்வேத மையம் நடத்தி வருகிறார். இவர் மேலும் கூறியதாவது.

ஒருவர் ஆரோக்கியமாகவும் அழகாகவும் இருக்க உடல் பராமரிப்பு முக்கியம். உடல் பராமரிப்பு என்றதும் புறத்தோற்றத்தை மட்டும் பராமரித்தால் போதாது. உள் உறுப்புக்களையும் பராமரிக்க வேண்டியது அவசியம்.

திடமான உணவும், இயற்கையான உணவு மற்றும் மருத்துவ முறைகளைக் கையாளுதலும் மிக அவசியம். சாதாரணமாக நமது உடலிருந்து வெளியேறும் கழிவுகள் மூன்று. அவை வியர்வை, சிறுநீர், மலம். இவற்றில் வியர்வை வெளியேறும் பகுதியான புறத்தோற்றத்தில் உள்ள தோல் பகுதி மிக கவனமாகக் கவனிக்கப்படவேண்டும். காரணம் தோலின் தன்மைதான் ஒரு மனிதனின் வயதையும் தோலின் அறிகுறியையும் காட்டுகிறது.

இளமையாக இருக்கும் ஒரு நபருக்கு புதிய செல்களின் உற்பத்தியில் மிக வேகமாக நடைபெறும். இதனால் தோல்பகுதி பளபளப்பாக இருப்பதுடன் இளமையாகக் காணப்படுவர். வயது ஆக ஆக தோலில் புதிதாக உருவாகும் செல்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பிக்கும்.

இதன் மூலம் முதுமையின் நோயின் அறிகுறியையும் தோல் காண்பிக்க ஆரம்பித்துவிடும். எனவே தோலை பராமரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் தோலின் உள் பகுதியில் பல அடுக்குகள் உள்ளன. இவை மாறி மாறி செயல்படும் போது எண்ணெய் சுரப்பிகள் தானாகச் சுரக்கும். இது ஒருபுறம் இருந்தாலும் நாம் அதிகமான எண்ணெய் பலகாரங்கள் சாப்பிடும்போதோ எண்ணெய்யை அதிகமாக மேல்புறத்தில் பயன்படுத்தும்போதோ எண்ணெய் சுரப்பது அதிகமாகிறது.

இவ்வாறு பல அடுக்குகள் கொண்ட செல்கள் செயல்படும்போது நாம் வெளியில் சென்றால் நம் மீது தூசி அதிகமாகப் படிகிறது.

இவ்வாறு அதிகமாகப் படியும்போது, விரிந்து விரிந்து சுருங்கும் தோலின் உள் பகுதியின் தூசி உள்ளே செல்கின்றன. இவ்வாறு செல்லும்போது நமக்கு வேர்க்குரு ஏற்படுகிறது.

இது பெரும்பாலும் வெயில் காலங்களில் அதிகமாக ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க எண்ணெய்ப் பொருட்கள் உபயோகிப்பதைக் குறைக்க வேண்டும்.

எண்ணெய் பொருட்களைக் குறைக்காவிட்டால் வேர்க்குரு உருவாகும். பின் வேர்க்குரு உடைந்து தோல் பகுதியில் பள்ளம் ஏற்பட்டு பின் கரும்புள்ளி ஏற்படும் வொரி வொரியாக இருக்கும் பாதிப்பு அதிகமாக இருந்தால் அம்மை தழும்பு போல் ஏற்பட வாய்ப்புள்ளது.

# உடற்பயிற்சியாகும்



உடற்பயிற்சி உடலுக்கு மிகவும் அத்தியாவசியமானது. உடலுக்கு உற்சாகம், ஆரோக்கியம், நல்ல தூக்கம் போன்றவைகளை எல்லாம் உடற்பயிற்சி தருகிறது. ஆனால் சிலர் உடற்பயிற்சி செய்ய நேரமே கிடைப்பதில்லை என்று குறைபட்டுக்கொள்வார்கள். அவ்வாறானவர்கள் முதல் முயற்சியாக தங்கள் வீட்டுவேலைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும். ஏனென்றால் வீட்டு வேலைகளில் சில நல்ல உடற்பயிற்சியாகவும் அமைந்துவிடுகிறது.

குழந்தைகளோடு விளையாடுவது ஒரு சிறந்த உடற்பயிற்சியாக அமைந்து உடலுக்கும், மனதுக்கும் ஆரோக்கியத்தைத் தரும். இப்போது பெரும்பாலான குழந்தைகள் ரீ.வி பார்ப்பது, வீடியோ கேம்ஸ் விளையாடுவது போன்றவைகளிலேயே அதிக ஆர்வத்தைக் காட்டுகிறார்கள். அது குழந்தைகளுக்கு நல்லதல்ல. அப்படிப்பட்ட குழந்தைகளோடு பெற்றோர்கள் விளையாட வேண்டும். கண்ணா மூச்சி விளையாட்டு, டென்னிஸ், கால்பந்து முதலிய ஓடிவிளையாடும் விளையாட்டு போன்றவைகளில் ஈடுபடவேண்டும்.

# வீட்டு வேலைகள்...

காய்கறித் தோட்டம் அமைத்து அதனைப் பராமரிப்பது நல்ல உடற்பயிற்சியாகவும், பொழுதுபோக்காகவும் அமையும். சிறிய இடம் இருந்தாலும் அந்த இடத்திற்குத் தகுந்த விதத்தில் தோட்டத்தை அமைத்துக்கொள்ளலாம். குழிதோண்டுவது, செடிகளை நட்டுவது, உரம் போடுவது, தண்ணீர் பாய்ச்சுவது போன்ற அனைத்தும் சிறந்த உடற்பயிற்சியாக அமைகிறது.

ஷொப்பிங் செல்வதும் உடற்பயிற்சிதான். சந்தையோ, கடையோ சற்று தூரத்தில் இருந்தால் மாலைநேரத்தில் நடந்தே சென்று பொருட்களை வாங்கலாம். முடிந்தளவு பொருட்களை வாங்கி தூக்கிக் கொண்டே வீடுவரை நடந்து வரலாம். இதனால் செலவு மிச்சம் என்பதைவிட உடலுக்கு நல்ல பயிற்சி கிடைக்கிறது என்ற நோக்கத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கார், இரு சக்கர வாகனங்கள் உங்களிடம் இருந்தால் அதைக் கழுவுவதை கௌரவக்குறைச்சலாக நினைக்காமல் நீங்களே கழுவுவது நல்ல உடற்பயிற்சியாக அமையும். தண்ணீரைக் கொண்டு செல்லுதல், குனிந்து – நிமிர்ந்து செயற்படுதல் உடலுக்குத் தேவையான பயிற்சியாக அமையும். இந்த வேலையைச் செய்து முடிக்கும் போது நன்றாக வியர்த்துவிடும். வியர்ப்பது உடலுக்கு நல்லது. கார், வாகனங்கள் கழுவும் வேலையில் ஆணும், பெண்ணும் ஈடுபடலாம். காலை அல்லது மாலைநேரத்தில் இந்த வேலையைச் செய்ய வேண்டும். நீச்சல் அடித்துக் குளிப்பது, நண்பர்களோடு நடப்பது, நடனமாடுவது போன்றவைகளும் நல்ல உடற்பயிற்சியே.

# சமைத்துச் சுவைப்போம்

## வாழைப்பழ சாக்லேட்

### தேவையான பொருட்கள்:



| | |
|---|---|
| கனிந்த வாழைப்பழம் | - 10 |
| பால் பவுடர் | - அரை கப் |
| சர்க்கரை | - 3/4கப் |
| கொக்கோ பவுடர் | - 2 டேபிள் ஸ்பூன் |
| வெண்ணெய் | - 1/2 கப் |
| கஜு, பிளம்ஸ் | - தேவையானளவு |

*செய்முறை:–* கொக்கோ பவுடர், பால் பவுடர் இரண்டையும் சலித்து வைத்துக்கொள்ளவும். வாழைப்பழத்தை மிக்ஸியில் நைஸாக அரைத்துக் கொள்ளவும். முந்திரி, பிளம்ஸ் ஆகியவற்றை நெய்யில் வறுத்துக்கொள்ளவும்.

அடி கனமான, வாயகன்ற ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து வாழைப்பழக்கூழ், சர்க்கரை சேர்த்துக் கிளறவும். சுருண்டு வந்ததும், பால் பவுடரைத் தூவி, வெண்ணெய்யைப் போட்டுக் கிளறவும். தீயைக் குறைத்து கலவை கையில் ஒட்டாத பதம் வரும்வரை கிளறி நெய் தடவிய தட்டில் கொட்டி சமமாக்கி முந்திரி பிளம்ஸ் ஆகியவற்றை மேலே தூவவும் ஆறிய பின் சிறிய துண்டுகளாக வெட்டி பரிமாறலாம். வாழைப்பழம் சாப்பிடாத குழந்தைகளுக்குக் கூட இது மிகவும் பிடிக்கும்.

ஒளி விளக்குகள் வைத்திருப்போர் ,மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச்செல்வார்களாக. -பிளேட்டோ

வலம்புரி

## அமைதி நிலையை ஏற்படுத்த புத்திஜீவிகள் முன்வரவேண்டும்

இலங்கை இன விவகாரம் தொடுவானமாக நீண்டு செல்கிறது.காலங்கள் கடந்து செல்கின்றனவே தவிர தீர்வுகள் எட்டப்படுவதாக இல்லை.

இதற்கான காரணம் தான் என்ன? இந்தக்கேள்வி பொதுமக்களின் மனங்களை பிழிகின்ற போதிலும் விடை கிடைக்கவில்லை.

சிறிய நாடான இலங்கையில் இருக்கக்கூடிய ஒரு சில இனங்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக வாழமுடியவில்லை. மதம், மொழி என்பவற்றின் பெயரால் நாட்டின் அதிகார உரிமை நிலை நிறுத்தப்படுகின்றது.

இதன் காரணமாக சிறுபான்மையின மக்கள் ஆளும் வர்க்கத்தால் அடிமைப்படுத்தப் படுகின்றனர்.உலக அறிவியல் வளர்ச்சியிலும் அடிமைத்தனசிந்தை விடைபெற்றுச் செல்லவில்லை.

இதனால் சிறுபான்மை இன மக்கள் தொகுதி பெரும்பான்மை இனத்துவ ஆட்சியாளார்களுக்கு எதிராக போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியது.

உலகின் அனுபவப் பார்வையில் அடக்கப்பட்ட இனங்கள் தொடர்ந்தும் அடங்கிப்போனதாக வரலாறுகள் இல்லை. அடக்கியவர்களுக்கு எதிராக அடங்கியவர்கள் கிளர்ந்தெழுந்தபோது அதன் வலிமையை தடுத்து நிறுத்தும் வல்லமை ஆண்ட இனங்களுக்கு இருந்ததும் இல்லை.

இங்குதான் சிறுபான்மை இன மக்கள் உரிமைச் சுதந்திரத்தின் உரித்திற்கு உரியவர்கள் ஆளாகின்றார்கள்.

இந்த வகைமையே ஈழத்தமிழரின் போராட்டத்திற்கும் பொருத்துடையதாகும். உலக வரலாற்றில் இடம் பெற்ற போராட்டங்களுடன் ஒப்பிடும்போது இலங்கை இன விவகாரம் வேறுபட்ட போக்கை கொண்டுள்ளதை அவதானிக்க முடியும்.

அதாவது எந்தவொரு நாடும் தனது அரசியல் எல்லைக்குள் நடக்கின்ற போராட்டத்திற்கு ஒரு தீர்வைக்காண முற்படும். இலங்கையில் அதுதான் இல்லை.

தீர்வுகாண்பதற்காக பேச்சுவார்த்தை இடம்பெறும். ஆனால் தீர்வுத்திட்டம் இருக்க மாட்டாது. தீர்வில்லாமல் -எதனை கொடுக்கப் போகின்றோம் என்ற தெளிவான முடிவில்லாமல் காலம் கடத்துவதனை மட்டுமே இலக்காக்கிக்கொண்டு இலங்கை அரசு இன விவகாரத்தை நகர்த்துகின்றது.

இவ்விதம் காலம் கடத்தும் செயல் உடனடியாக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாவிடினும் நீண்டகாலத்தில் பேரழிவையே தரும்.

இவ்வாறு இலங்கை அரசு இனவிவகாரத்தை தட்டிக்கழிப்பதன் பின்னணியில் வெளிநாடுகளின் ஆலோசனைகளும் அழுத்தங்களும் உண்டு என்பது மறுக்கமுடியாத உண்மை.

குறிப்பாக இந்தியாவுக்கு எதிரான போக்குடைய நாடுகள் இலங்கைக்கு தவறான வழிகாட்டுதல்களையே வழங்கி வருகின்றன.

அண்டை நாடான இந்தியாவின் ஆதிக்கம் இலங்கையில் இருப்பதை தடுப்பதும், இலங்கை மீது தாம் ஆதிக்கம் செலுத்துவதன் ஊடாக இந்தியாவின் உபகண்ட வல்லாண்மையைக் குறைப்பதுமே இதன் நோக்கமாகும்.

இவ்விதம் வெளிநாடுகளின் போக்கினால் ஆற்றலையும் இலங்கை இன விவகாரத்தை முடிபுக்குக் கொண்டுவருவதாயின், நாட்டு புத்தி ஜீவிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து உபாயம் அமைக்கவேண்டும்.

# புலிகள் மீளவும் பேச்சுக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு உள்ளது

## அமைச்சர் ரோகித போகல்லாகம தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவாப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று புலிகள் எடுத்த முடிவு குறித்து அரசுக்கு அதிகாரபூர்வத் தகவல் வரவில்லை என்று ஜெனீவாப் பேச்சுக்களில் கலந்துகொண்ட அமைச்சர் ரோகித போகல் லாகம பி.பி.சிக்கு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துக்கூறுகையில், புலிகளின் முடிவினை எப்போதும் நாங்கள் மிகவும் முக்கியமான அறிவிப்பாகத்தான் பார்ப்போம். அதேபோல அவர்கள் தங்களது முடிபுகளில் மிகவும் யதார்த்தமாக இருப்பார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.அத்துடன் அவர்கள் அரசுடன் பேச்சுவார்த் தைக்கு வருவார்கள் என்று நாங்கள் நம்பிக்கை வைத் துள்ளோம்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் எந்தவகையான ஆயுதக் குழுவும்நடமாடு வதற்கான சூழ்நிலையினை இல்லாதொழிக்க நாங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம்.

எம்மால் முடிந்த மிகவும் உச்சபட்ச அளவிற்கு சட்ட ஒழுங்கைப் பேணுகின்றோம். இது தொடர்பில் இன்னமும் சட்ட ஒழுங்கைப் பேணக்கூடிய வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியத்தையும் உணருகின்றோம். அதே வேளை, எமது மக்களின் பாதுகாப்பு குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டும். திருகோண மலையில் இடம்பெற்ற தாக்குதல்களின்போது பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

பயங்கரவாத தாக்குதல்களிலிருந்து நாம் மக்களை பாதுகாக்க வேண்டும். ஜெனீவாவில் முதற்கட்டப் பேச்சு வார்த்தையில் இடம்பெற்ற விடயங்களை எமது படையினரை இலக்கு வைத்து தாக்கும் விடயம் குறித்து நாம் கவனம் செலுத்தியாக வேண்டும்.

எனவே பல்வேறு தரப்பட்ட விடயங்கள் குறித்த நடவடிக்கைகளைமேற்கொள்ளவுள்ளோம். வன்செயல்களைக் குறைத்து அவற்றை இல்லாது ஒழிக்க முயலுகின்ற அதேவேளை, புலிகள் வன்செயல்களில் ஈடுபடாது இருக்க வேண்டுமென்றும் நாம் கேட்டுக் கொண்டுள்ளோம்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் தரப்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு என்னவென்றால் ஜெனீவாவில் இலங்கை அரசாங்கம் ஒத்துக்கொண்டபடி, உறுதிமொழி வழங்கியபடி பிற ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை அரசாங்கம் தடுக்கவில்லை என்பதே.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் எந்த ஆயுதக் குழுவினரும் நடமாடும் சூழலை இல்லாது ஒழிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம் என்றார்.

புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகளுக்கு கிளிநொச்சி செல்ல ஹெலிகொப்டர் வசதி செய்து தர வேண்டும் என்ற விஷயத்தில் அரசு இன்னும் சற்று நெகிழ்வுத் தன்மையுடன் நடந்துகொண்டிருக்கலாம் என்று ஒரு கருத்து நிலவுவதை சுட்டிக்காட்டிய போது, அமைச்சர், அரசு இந்த விஷயத்தில் நிச்சயம் நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொண்டதாகவும், தனியார் ஹெலிகொப்டர்கள் ஏற்பாடு செய்வது குறித்து நோர்வே தூதரகத்துடன் பேசிக்கொண்டிருந்ததாகவும் கூறினார். (த-9,4)

# 2005ஆம் ஆண்டு2148 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 2005ஆம் ஆண்டு 22 நாடுகளில் குறைந்த பட்சம் 2ஆயிரத்து 148பேருக்கான மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபை தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ் வருடாந்த அறிக்கை நேற்று முன்தினம் மேற்படி சபையால் வெளியிடப்பட்டது. கடந்த வருட மரணதண்டனை நிறைவேற்றம் குறித்து இவ்வறிக்கை:பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஆண்டு பெருந்தொகையானோருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட நாடுகளில் சீனா முதல் இடத்தை வகிக்கிறது. அடுத்த இடங்களை முறையே ஈரான், சவூதி அரேபியா , அமெரிக்கா ஆகிய நாடுகள் வகிக்கின்றன. சீனாவில் ஏறத்தாழ ஆயிரத்து 770பேருக்கான மரணதண்டனை நிறைவேற்றபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

எனினும் இதன் உண்மையான எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் .சீனாவிலுள்ள சட்டவல்லுநர் ஒருவர் உண்மையான தொகை 8ஆயிரம் வரை இருக்கலாம் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஈரானில் 94பேருக்கும், சவூதி அரேபியாவில் 86 பேருக்கும் , அமெரிக்காவில் 60பேருக்கும் கடந்த ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றபட்டுள்ளது. இந் நாடுகளில் ஒரே விதமான மரணதண்டனை நிறைவேற்றப்படுவதில்லை.

சீனாவில் துப்பாக்கியினால் சுட்டோ , விஷஊசி மூலமாகவே மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறது. ஈரானில் தூக்கிலிட்டோ, கல்லால் எறிந்தோ இத்தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

சவூதி அரேபியாவில் சிரச்சேதம் செய்வதன் மூலம் இது நிறைவேற்றப்படுகிறது. அமெரிக்காவில் மின்சாரம் பாய்ச்சுவதன் மூலமாகவோ ,விஷஊசி மூலமாகவோ மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறது.

சீனாவில் ஒருவர் 67குற்றங்கள் வரை புரிந்திருந்தால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இவற்றில் வரி மோசடி, போதைப் பொருள்ள கடத்தல், களவு, நயவஞ்சக அபகரிப்பு ஆகிய குற்றங்களும் அடங்கும்.

ஈரான் மாத்திரமே கடந்த ஆண்டு பாலியல் குற்றங்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது. சிறுவர்களாக இருந்தபோது புரிந்த குற்றங்களுக்காக எட்டுப் பேருக்கு கடந்த ஆண்டில் மரணதண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது. இவர்களில் இருவர் 18வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாவர். பாலியல் குற்றங்களுக்கான மரணதண்டனையை அமெரிக்க கடந்த 2005ஆம் வருட மார்ச்சில் இரத்துச் செய்துள்ளது.

மெக்ஸிக்கோ , லைபீரியா ஆகிய நாடுகள் உட்பட இன்று 86நாடுகள் குற்றங்களுக்கு மரணதண்டனை விதிப்பதை முற்றாக இரத்துச் செய்துள்ளன.1977ஆம் ஆண்டு 16 நாடுகள் மாத்திரமே மரண தண்டனை விதிப்பதை இரத்துச் செய்திருந்தன.

இன்று இந்த எண்ணிக்கை 86ஆக உயர்ச்சி கண்டுள்ளது. 22நாடுகளில் 2005ஆம் ஆண்டு ஏறத்தாழ 2ஆயிரத்து 148பேருக்கும் 2004ஆம் ஆண்டு 3ஆயிரத்து 797 பேருக்கும், 2003ஆம் ஆண்டு ஆயிரத்து 146பேருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மரணதண்டனை மனித உரிமைகளுக்கு குந்தகமானது. மனித பெறுமானங்களுக்கு முரண்பாடானது. நேர்மையற்ற, ஒரு தலைப்பட்சமான விசாரணைகள், அரசியல் பழிவாங்கல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பாரபட்சமான முறையிலும் அடிக்கடி மரணதண்டனை தீர்ப்புக்கள் வெளியாகியுள்ளன என்றுள்ளது. (த-9)

## கீரிமலை செல்ல அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்வதற்கும் கீரிமலைக் கடலில் அந்தியேட்டிக் கிரியைகள் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்கும் பொதுமக்களை இராணுவம் அனுமதி மறுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கீரிமலைக்கடலில் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்கு யாழ்.குடாநாட்டிலிருந்து ஏராளமான பொதுமக்கள் செல்வது வழக்கம். தற்போது இராணுவத்தினர் அங்கு செல்வதற்கு அனுமதி மறுத்து வருவதால் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (து-15)

## கருத்தரங்கு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு கருத்தரங் கொன்றை நடாத்தவுள்ளது.

இக் கருத்தரங்கு எதிர்வரும் ஆனிமாதம் 3மாதம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுவதுடன் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் அற நெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பாடநூல்கள் மற்றும் இசைக்கருவி, சீருடைகள் என்பன வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. மறுநாள் தீவகத்தில் கருத்தரங்கு நடைபெற வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-132,133)

## மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்தில் திருட்டு சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட மூவரை யாழ்.நகரப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மூன்று கையடக்கத் தொலைபேசியுடன் காணப்பட்ட சந்தேக நபர் ஒருவரை விசாரணை செய்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி திருட்டுத் தொடர்பாக மூவரும் உண்மையை ஒப்புக்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (க-5)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

தத்துவங்களை நிறுவியவர்கள் அனைவரும் கடும் விரதங்களை மேற்கொண்டு, இறையருள் பெற்று, அவன் ஆணைப்படி பல கோட்பாடுகளை உபதேசித்தனர். இவை இறைவனிடமிருந்து தோன்றியவை. ஆனால் அவன் இந்தக் கோட்பாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன்.






யாழ்.நகரில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் புதுவருடதினத்தன்று சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து நேற்று நகரில் கடைகள் பூட்டப்பட்டிருப்பதையும் போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழு அலுவலகத்தில் மகஜர் கையளிப்பதையும் படங்களில் காணலாம் (படங்கள் சதீஸ்)

# கொலைகளுக்கு ஈ.பி.டி.பி.கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வரும் படுகொலைச் சம்பவங்களை ஈ.பி.டி.பி.கண்டித்துள்ளது. அமைதியையும் சமாதானத்தையும் விரும்பாத சக்திகள் இச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக அவ் அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகொலைகள் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதும் படுகொலைகளினால் எதையும் சாதித்து விடமுடியாது என்பதும் ஈ.பி.டி.பியின் உறுதியான நிலைப்பாடு.

மக்களோடு முரண்பட்டுக்கொள்வதற்கு எமக்கு எந்தப் பிணக்குகளும் கிடையாது. ஆனாலும் அண்மைக்காலமாக தொடரும் படுகொலைகளுக்கான பழியை ஈ.பி.டி.பி. மீது சுமத்தப்படுகிறது என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டத் தலைமைச் செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-4,5)

# தென்மராட்சியில் பல இடங்களில் நேற்று இராணுவத்தால் தேடுதல்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் பல இடங்களில் இராணுவத்தினரால் நேற்று பாரிய சுற்றிவளைப்புத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. நுணாவில் மேற்கு, மட்டுவில் உள்ளிட்ட பகுதிகளில் இப்பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பலர் கைதுசெய்யப்பட்டு நுணாவில் இராணுவ முகாமில் வைத்து விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை நேற்று ஏ9 வீதியில் வீதிச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டிருந்தது. வீதியில் சென்றோர் மறிக்கப்பட்டு தீவிரமாக விசாரிக்கப்பட்ட பின்னரே மீண்டும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இது இவ்வாறு இருக்க தென்மராட்சிப் பகுதிகள் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் சோபை இழந்து காணப்படுகின்றது. அண்மை நாட்களாக இடம்பெற்று வரும் தாக்குதல் சம்பவங்களை அடுத்து இந்நிலை காணப்படுவதாக கூறப்பட்டது. (சு-5.4)

# புத்தூர் படுகொலைச் சம்பவம் சாட்சியங்கள் நீதிமன்றால் பதிவு

புத்தூரில் கடந்த 19 ஆம் திகதி இரவு படுகொலை செய்யப் பட்ட ஐந்து இளைஞர்களின் கொலை சம்பந் தமான சாட்சியங்கள் நேற்று பிற்பகல் மல் லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆட்டோவில் கொண்டுபோய் வண்ணாத்திப்பால வீதியில் உள்ள ஊறணி என்னும் இடத்தில் விடப்பட்ட வசந்தன் முதலில் நீதிபதியின் அறையில் வைத்து சாட்சியம் அளித்தார்.

நீதிபதி தனது அறையில் சாட்சியங்களைப் பதிவு செய்யும்போது பொலிஸாரையோ அன்றி நீதிமன்ற ஊழியர்களையோ உள்ளே அனுமதிக்கவில்லை என தெரி விக்கப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்திற்கு படுகொலையுண்ட இளைஞர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் என பலரும் சமுகமளித்திருந்தனர்.

இவரின் சாட்சியத்தைத் தொடர்ந்து பல விடயங்கள் வெளிவர முடியும் என தெரியலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (சு-4,5)

## ஹர்த்தால் காரணமாக...

இப் போராட்டத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டிருந்த போதும் உணவகங்கள், மருந்தகங்கள் திறந்திருந்தன.

வழமையான போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெற்றன. இதேவேளை தமது அழைப்பையேற்று ஹர்த்தால் அனுட்டிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் முஸ்லிம்சமுகம் நன்றிதெரிவித்துள்ளது. (சு-15)

# கணவன்–மனைவி மீது வவுனியாவில் தாக்குதல்

வவுனியா மணிபுரம் என்னும் இடத்தில் வீடொன்றில் இருந்த கணவன் மனைவி மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் கணவன் கொல்லப்பட்டுள்ளார். அத்துடன் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் நாசர் (வயது 30) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் காயமடைந்துள்ள அவரது மனைவி நாசர் பாபீ வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (சு-4)

# க.கா.குழுவின்மீது தாக்குதலாம்

முல்லைத் தீவுக்கடற்பரப்பில் யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழு உறுப்பினர் பயணம் செய்த கடற்படைப் படகொன்றின் மீது அதிவேக கண்ணாடி இழைப்படகுகளில் வந்த விடுதலைப்புலிகள் கனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றதாகவும் புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளனர் எனவும் இராணுவத்தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. (சு-4)

## வவுனியா புலிகளின்...

குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இத் தாக்குதலில் புளியங்குளம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நவ்வி கிளையின் விற்பனை முகாமையாளரான மு.கந்தசாமி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்தினை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பார்வையிட்டுள்ளனர். இத் தாக்குதல் சம்பவத்தினை விடுதலைப் புலிகளின் ஊடகத்துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர். (சு)

## பிரச்சினைகளை...

நடவடிக்கை எடுப்பதற்கும் இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் தலைவராக ஜனாதிபதியும் மற்றும் பிரதமர் ரட்ணசிறி, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் , ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் போது அரச குழுவில் தலைமைத்துவம் வகித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ,ஜெராஜ் பெர்ணான்டோப்புள்ளே ,அநுர பிரியதர்சன யாப்பா ஆகியோரும் இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (சு-4)

# போக்குவரத்துச் சபையின் புதிய கட்டண விபரம்

(யாழ்ப்பாணம்)

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து போக்குவரத்துச் சபையின் கட்டணங்கள் 16 வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளது.

இந் நடைமுறை எதிர்வரும் 24 ஆம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படவுள்ளது. அதிகரிக்கப்பட்ட புதிய கட்டணங்கள் வருமாறு

| தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|
| 4.00 | 5.00 |
| 6.00 | 8.00 |
| 8.00 | 9.00 |
| 10.00 | 12.00 |
| 11.00 | 13.00 |
| 13.00 | 15.00 |
| 15.00 | 17.00 |
| 16.00 | 19.00 |
| 16.50 | 19.50 |
| 18.00 | 21.00 |
| 19.00 | 22.00 |
| 19.50 | 23.00 |
| 20.00 | 23.50 |
| 21.00 | 24.00 |
| 22.00 | 26.00 |
| 23.00 | 27.00 |
| 24.00 | 28.00 |
| 25.00 | 29.00 |
| 26.00 | 30.00 |
| 27.00 | 31.00 |
| 28.00 | 32.00 |
| 29.00 | 34.00 |
| 30.00 | 35.00 |
| 31.00 | 36.00 |
| 32.00 | 37.00 |
| 33.00 | 38.00 |
| 34.00 | 39.00 |
| 35.00 | 41.00 |
| 36.00 | 42.00 |
| 37.00 | 43.00 |
| 38.00 | 44.00 |
| 39.00 | 45.00 |
| 40.00 | 46.00 |

(சு)






# புலிகளை பேச்சுக்கு இணங்கவைக்க...

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நேற்று பிற்பகல் கிளிநொச்சி சென்றடைந்தார். விமானப்படைக்குச்சொந்தமான உலங்குவானூர்தி மூலம் பிற்பகல் 2மணிக்கு கிளிநொச்சி சென்றடைந்த உல்ப் ஹென்றிக்சன் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இச் சந்திப்பு தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து எதுவித தகவல்களும் வெளியிடப்படவில்லை. ஆனால் விடுதலைப்புலிகளின் கிழக்குப் பகுதி தளபதிகளின் கிளிநொச்சிப் பயணம் தொடர்பாக மேலதிக ஆலோசனைகள் மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்கள் ஆகியவற்றுடன் கிளிநொச்சிக்கு உல்ப் ஹென்றிக்சன் சென்றிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை தூதுவர் உல்ப் ஹென்றிக்சன் இன்று சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் ஹான்சன் பௌயர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்து பேசியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த அவர் இன்று மீண்டும் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளுடன் ஆலோசனை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கிழக்குத் தளபதிகளின் பயணம் குறித்த திகதி இன்று வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சு-4)

# அபிப்பிராயம் கோரப்படுகின்றது

பருத்தித்துறை பிரதேசசபைக்கு தலைமை அலுவலகக் கட்டிடம் மந்திகை உபய கதிர்காமம் வீதியில் அமைப்பதற்கு காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக வரியிறுப்பாளர்களிடம் இருந்து அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி.
21.04.2006

செயலாளர்






இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 22.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.